Registered as a News paper　　பக்கங்கள் - 08　　விலை - ரூபா 07

# தமிழ் அலை
Tamilalai
தினசரி

அலை - 01　　03-01-2004 சனிக்கிழமை　　ஒலி - 90

அதிநவீன தொழில்நுட்பத்தில்
உங்கள் அச்சுப்பதிப்புக்களை
(கறுப்புவெள்ளை, கலர்)
விரைவாக செய்து கொள்ள
நீங்கள் தெரிவுசெய்ய வேண்டிய
ஒரே இடம்:
நிதி பதிப்பகம்
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை
தொலைபேசி. 065. 2226110

# ஒந்தாச்சிமடக் கடற்கரையில் 30 அடி குழியிலிருந்து கப்பல் மீட்பு!

## புராதன கப்பலா? தொல்லியல் ஆராய்ச்சி நிலையத்திற்கு அறிவிப்பு

(எஸ். ரவிந்திரன்)

**ஓந்தாச்சிமடம் கடற்கரையில் ஏற்கனவே கடல் இருந்த இடத்தில் மண்வார்க்கப்பட்ட பிரதேசத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னர் புதையுண்ட றோளர் ரக கப்பல் ஒன்று ஓந்தாச்சிமட வாசி ஒருவரால் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.**

இக்கப்பலை பார்ப்பதற்கென நூற்றுக்கணக்கானோர் தினமும் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் தீயில் எரியுண்டு அங்கவீனமுற்ற ஒருவர் தனது சீவனோபாயத் தொழிலாக இரும்பு, பிளாஸ்ரிக் பொருட்களை தினமும் சேகரித்து வாழ்க்கை நடாத்தி வந்தார். இவர் ஓந்தாச்சிமடம் கடற்கரையில் கடலில் அடைந்த பிளாஸ்ரிக் பொருட்களைச் சேகரிக்கும் போது இரும்புத் தடயம் ஒன்றைக் கண்டார்.

அவ்விடத்தை தோண்டும் முயற்சியில் கிராம வாசிகளின் உதவியுடன் ஈடுபட்ட அவருக்கு அவ்விடத்தில் புதையுண்ட கப்பல் ஒன்று தெரியவந்தது.

ஐம்பது அடி நீளமும் முப்பது அடி அகலமும் கொண்ட குழியில் தற்போது கப்பலின் அரைப்பகுதி தோண்டப்பட்டுள்ளது. இதைக் கேள்வியுற்ற களுவாஞ்சிகுடிப் பொலிஸார் ஸ்தலத்துக்கு உட

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட்.சோளன் செய்கையாளர் வருமான வீழ்ச்சி குறித்து கவலை

(எஸ்.ரவிந்திரன்)

மட்டக்களப்பு மாவட்டத்திலே 2005 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சோளம் செய்கை பண்ணப்படுகின்றது. இதில் 90 வீதம் படுவான்கரைப் பிரதேசமாகும். மீள்குடியேற்றக் கிராமங்களை அண்டிய பிரதேசங்களில் உ ள்ள மக்கள் சோளம் செய்கையில் ஈடுபட்டாலும், இம்முறை அதிக விளைச்சலைப் பெறமுடியவில்லை என உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டோர் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக ஏன் இம் முறை அதிக விளைச்சல் கிடைக்கவில்லை என மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்கள சிரேஸ்ட உத்தியோகஸ்தர் ரவீந்திரனிடம் கேட்ட போது உரிய வேளைக்கு முதலே மழை பெய்ததால், மழை நீர் தேங்கி நின்றதன் காரணமாக பசளை இட முடியாமையும், இப்பகுதியில் மழை இன்மையும் சோளன் மொத்திகள் சிறிதாகி விளைச்சல் குறைந்ததாகத் தெரிவித்தார். இதே வேளை அறுவடை செய்யப்பட் சோளன்களை குறைந்த விலைக்கு விற்பதானால் இப்பயிர்ச்செகையில் ஈடுபட்டோர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக விவசாயி ஒருவரிடம் வினாவிய போது தங்களுக்கு விவசாய திணைக்கள அதிகாரிகளால் உரிய அறி வுரைகள் வழங்கப்படாமையும் இதற்கு ஒரு காரணம் என்றார்.

## திட்டமிட்டு சமாதானத்தை குழப்புவோர் மீது நாம் விழிப்பாக இருப்பது அவசியம்

(அம்பாறை நிருபர்)

''சமாதானத்தைக் குழப்பி அரசியலாபம் தேடமுனைபவர்களை துணிச்சலோடு நாம் இனம் கண்டு பகிரங்கப்படுத்துவதுடன் தட்டமிட்டு சமாதானத்தை குழப்ப எத்தனிப்போர் குறித்து மக்கள் மிக விழிப்புடன் செயற்பட வேண்டும்''

இவ்வாறு அகில இலங்கை பொது ஊழியர் முன்னணி புத்தாண்டையொட்டி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பொது ஊழியர் முன்னணியின் தலைவர் எஸ். லோகநாதன் செயலாளர் ரீ.விக்கிரமசிங்கம் ஆகியோர் இணைந்து முன்னணியின் சார்பில் இந்த அறிக்கையை விடுத்துள்ளனர்.

இப்புத்தாண்டு அறிக்கையல் மேலும் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது வருடத்தில் தொடரப்படும் இன்றைய இலங்கையின் சமாதான முயற்சிகள் மேலும் முன்னெடுக்கப்படுமா? என்ற ஐயப்பாடு தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானத்தை குழப்பமாட்டோம் என்ற வாக்குறுதி ஆறுதலை அளித்துள்ள போதிலும் திட்டமிட்டு சமாதானத்தை குழப்ப எத்தனிப்போரின் நடவடிக்கைகள் கவலையளிக்கின்றன.

இதேவேளை வேலைநிறுத்தம் என்ற போர்வையில் அரசுக்கு நெருக்கடி கொடுத்துவருவோரின் கடினப்போக்கினால் அரசாங்கம் சமாதானத்தற்கு முன்னுரிமை வழங்க முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.

உரிமையை தட்டிக்கேட்பது குற்றமில்லையெனினும் இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் அரசை அடிபணிய வைப்பதற்காக பணயக்கைதிகளை நடத்துவதுபோல் வேலைநிறுத்தங்கள் செய்வதை நியாயப்படுத்த முடியாது.

இந்த அடிப்படை வாதிகள் தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் கபடநாடக சூத்திர தந்திரோபாயங்களும் அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

மேலும் தமிழ் மக்களு

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு 234 மாணவர்கள் அனுமதி

(அம்பாறை நிருபர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு இம்முறை (2004) 234 புதிய மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர்.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி ஏ. ஜி. உசைன் இஸ்மையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

இதன்படி உயிரியல் விஞ்ஞானத்துறைக்கு 24 பேரும் பௌதிகத்துறைக்கு 32 பேரும் கலை கலாசாரத்துறைக்கு 104 பேரும் வர்த்தக முகாமைத்துவத் துறைக்கு 68 பேரும் வணிகத்துறைக்கு 07 பேரும் அனுமதி பெற்றுள்ளதாக உபவேந்தர் கலாநிதி ஏ.ஜி. உசைன் இஸ்மையில் மேலும் தெரிவித்தார்.

மேலும் மேற்படி அனுமதி பெற்றுள்ள புதிய மாணவர்களின் அனுமதிக்கான பதிவு எதிர்வரும் 12ம் திகதி (12.01.2004) தென்கிழக்கு பல்கலைக்கழக ஒலுவில் வளாக நிருவாக செயலகத்தில்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## திருவாசக முற்றோதல்

(அரியம்)

நாட்டில் சாந்தி சமாதானம் வேண்டியும் மழை வேண்டியும் நாளை ஞாயிற்றுக்கிழமை முதலைக்குடா ஸ்ரீ பாலையடி வினாயகர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு இரவு வரை இடம் பெறும்.

முதலைக்குடா ஸ்ரீ பாலையடி வினாயகர், ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலைய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் இடம் பெறும். இத்திருவாசக முற்றோதல் நிகழ்வில் சிவயோகச் செல்வன் த. சாம்பசிவம் ஐயர் தலைமையில் மட்டக்களப்பு சைவ திருநெறிமன்றம், இந்து இளைஞர் மன்றங்கள், சமயப் பெரியார்கள் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

2004ம் ஆண்டு படுவான்கரைப் பகுதில் இடம் பெறும் முதலாவது நிகழ்வு என்பது குறிப்பிடத்தக்கது.

## மட். கல்வியற் கல்லூரி பயிலுனர் ஆசிரியர்களுக்கு ஒரு வருடகாலத்திற்கு கற்பித்தல் பயிற்சி

(எம். யுவராஜ்)

மட்டக்களப்பு தாழங்குடா கல்வியில் கல்லூரியிலிரு ந்து 95 பயிலுனர் ஆசிரியர்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மூன்று வலயங்களில் ஒரு வருட கற்பித் தலை மேற்கொள்வதற்காகச் இம் மாதம் 5ம் திகதி செல்லவுள்ளனர்.

பட்டிருப்பு வலயத்திற்கு 44 பேரும் மட்டக்களப்பு வலயத்திற்கு 24 பேரும் கல்குடா வலயத்திற்கு 27 பேரும் ஆசிரியர்களாக ஒரு வருடத்திற்கான கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

இதில் பட்டிருப்பு வலயத்தில் 27 பாடசாலைக்கு 44 பயிலுனர்கள் மட்டக்களப்பு வலயத்தில் 19பாடசாலைக்கு 24 பயினுனர்கள் கல்குடா வலயத்தில் 17 பாடசாலைகளுக்கு 27 பயிலுனர்கள் செல்லவுள்ளனர். மட்டக்களப்பு வலயத்திற்கு ஆரம்பநெறிக்கு 13 பேர் தொழிநுட்ப பாடநெறிக்கு 4பேர் முதல்மொழி பாடநெறிக்கு 3 பேர் சமூகக்கல்வி பாடநெறிக்கு 4 பேரும் என மொத்தம் 24 பேரும் பட்டிருப்பு வலயத்தில் ஆரம்பநெறிக்கு 27 தொழிநுட்பநெறிக்கு 4 முதல் மொழி பாடநெறிக்கு 9 சமுகக்கல்வி பாடநெறிக்கு 4 பேரும் என மொத்தம் 44 பேரும் கற்குடா வலயத்தில் ஆரம்ப பாடநெறிக்கு 16பேரும் தொழிநுட்ப பாடநெறிக்கு ஒருவரும் முதல் மொழி பாடநெறிக்கு 5பேரும் சமூகக்கல்வி பாடநெறிக்கு 5பேரும் என மொத்தம் 27 பேர் ஜனவரிமாதம் 5ம் திகதி செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச் சேவை நியமனத்தில் ஏனைய வலயங்களை விட கல்குடா வலயத்திற்கு குறைவான பயிலுனர் ஆசிரியர்களே நியமனம் பெற்றுள்ளனர் இந்நியமனம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு அம்பாறை கல்விப் பிரிவினர் பரிசீலனை செய்யவுள்ளதாக அதன் துணைப் பொறுப்பாளர் கேசவன் தெரிவித்தார்.

## போடியார் பொறி வெடி

இடைக்கால நிர்வாக சபை அமைக்க இடைக்கால அரசியல் யாப்பு அவசியம்

அமைச்சர் றவுப் ஹக்கீம்



நீங்க ஆப்பு அடிக்கிறத்தில கெட்டிக்காற ஆள்தான்...

தமிழ் பேசும் மக்களின் உணர்வலை

தமிழ்அலை
Tamilalai
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065. 2226110
தொலைநகல:- 065. 2226110
மின்னஞ்சல்:- tamilalai32@yahoo.com.
இணையத்தளம்:- www.tamilalai.net

03.01.2004

## அரசின் நடவடிக்கை அபத்தமானது

டோக்கியோ நிதியை பெற்றுக் கொள்வதற்கான இராஜதந்திர முயற்சிகளில் அரசு இறங்கியுள்ளது. சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று ஒரு நம்பிக்கை ஊட்டக்கூடிய அறிகுறி காணுமிடத்து மாத்திரமே டோக்கியோ மாநாட்டில் கொடையாளி நாடுகள் வழங்க முன்வந்த நிதியினை சிறிலங்கா வுக்கு வழங்கப் போவதாக அந்நாடுகள் தெரிவித்தன.

எனினும் துரதிஸ்ரவசமாக ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை பொறுப்பேற்றதையடுத்து சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்தது மாத்திரமன்றி கொடை வழங்கும் நாடுகளும் நிதி உதவி வழங்கும் தீர்மானத்தை ஒத்திவைத்தன.

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பமாகி ஒரு அமைதிச் சூழல் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கொடை வழங்கும் நாடுகளின் நிதி உதவி கிடைக்குமென அந்நாடுகள் சிறிலங்கா அரசுக்கு அறிவுறுத்தியுள்ள சூழ்நிலையில் தற்போது அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்திருக்கும் கருத்து சமாதானத்தின் மீது அக்கறையில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான புரிந்துணர்வுடன்படிக்கை மட்டுமே தற்போது ஊசலாடுகின்றது வேறு எந்தவித தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிவர்த்தி செய்யக்கூடிய அணுகுமுறைகள் மேற் கொள்ளப்படாத ஒரு சூழ்நிலையில் வெறுமனே நிதியை பெறுவதற்கான முயற்சியில் அரசு அக்கறை காட்டக் கூடாது.

சர்வதேச ரீதியாக கிடைக்கும் நிதி வடக்கு கிழக்கில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே விடுதலைப்புலிகளின் கோரிக்கை யாகும் இவாறான ஒரு நிதி வடக்கு கிழக்கு புறம்பாக சிறிலங்கா அரசு பயன்படுத்துவதை நியாயமாகக் கருத முடியாது.

### இன்றைய நாள்

சூரி ~ காலை 06:30—மாலை 5:57
ராகு ~ மு.ப 09:21 — மு.ப 10:47
எம ~ 01.39 — பி.ப . 03:05
தெய்.முகூ மு.ப.11.16 ந.ப 12:13
நஷ ~ தியா மு.ப.07.57— மு.இ .09:42
திதி ~ பி.ப — 1 : 47 வரை ஏகாதசி
நஷ காலை 06 : 42 ~ வரை பரணி
சு.யோகம் ~ காலை 6:42 வரை
மரணயோகம் ~ பின்னர் அமிர்தம்
சிராத்தம் ~ அதிதி
பிறந்ததின வழிபாடு:~ கார்த்திகை

இன்று வீரபாண்டிய கட்டப்பொம்மன் பிறந்ததினம்

# தமிழ் மொழி மூல ஆசிரியர்களின் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி பிரதமருக்கு சம்பந்தன் எம்.பி. கடிதம்

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தமிழ்மொழி மூலபாடசாலைகளில் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கு நிலவும் பற்றாக்குறை தொடர்பாகவும், அதை நிவர்த்தி செய்யும் வகையில் நியமனங்களை உடன் வழங்க வேண்டிய அவசியம் பற்றியும், தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., பிரதமர் ரணிலுக்கு நீண்ட கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு ஜி.சீ.ஈ. உயர்தரத் தகுதிபெற்றவர்கள் ஆயிரம்பேரை ஆசிரியர்களாக நியமனம் செய்வது தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. 2000 ஆம் ஆண்டில் அமைச்சரவை இந்த ஆள் சேர்ப்புக்கு அங்கீகாரம் வழங்கியது. ஆனால், மூன்று வருடங்கள் கழித்தே இம் முடிவு இப்போது முறைப்படுத்தப்ப டவுள்ளது. ஜி.சீ.ஈ. உயர்தரத்தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி வெளியிடப்பட்ட விளம்பரத்தில் தவறுகள் மற்றும் குறைகள் காணப்படுகின்றன என்று எனது கவனத்துக்காகக் கொண்டுவரப்பட்டுள்ளது.

அவையாவன:-

(அ) ஜி.சீ.ஈ. உயர்தரத் தகுதி யுடன் தெரிவாகும் ஆசிரியர்கள் மாவட்ட, பிரதேச அடிப்படையில் அவ்வப்பிரதேசத்தில், மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மத்தியிலிருந்தே நியமிக்கப்படவேண்டும். அப்போது தான், நியமனம் பெறும் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்ட மாவட்ட, பிரதேசங்களில் தொடர்ந்து பணிபுரிவதை உறுதிப்படுத்த முடியும். இந்த நடைமுறைதான், முன்னர் நடத்தப்பட்ட ஆள்சேர்ப்பின் போது கடைப் பிடிக்கப்பட்டது.

தற்போது வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தின் படி விண்ணப்பதாரர்கள் எங்கிருந்தும் விண்ணப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டின் வேறு பகுதிகளிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் நியமனம் கிடைத்த தும் வடக்கு - கிழக்கில் சிலகாலம் பணியாற்றிவிட்டு பின்னர், வடக்கு - கிழக்குக்கு வெளியே இடமாற்றம் கோருவர். இம்மாதிரியான ஆட்சேர்ப்பினால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான பற்றாக்குறைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. கடந்தகால நடைமுறை ஏன் பின் பற்றப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ளமுடியாதுள்ளது. தொழில் வாய்ப்புத் துறையில் வடக்கு - கிழக்கு இளைஞர்களுக்குக் கிடைக்கவிருக்கும் இந்தச்சந்தர்ப்பத்தைப்பறிப்பதாக இப்புதிய விளம்பரம் அமைந்துள்ளது. இது அநீதியானதாகும். இதனை அனுமதிக்கக்கூடாது.

(ஆ) தற்போது வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்தின்படி, ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய நான்கு துறைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த நான்கு துறைகளையும் சேர்த்து பத்துத் துறைகளுக்கு ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன என்று வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சு அடையாளங்கண்டுள்ளது. சங்கீதம்/நடனம், சித்திரம், உடற்கல்வி, கடற்றொழில், விவசாய விஞ்ஞானம், மனையியல் ஆகியவையே ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவும் துறைகள் ஆகும். எஞ்சிய துறைகளும் ஆள் சேர்ப்புத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். வடக்கு - கிழக்கில் காணப்படும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களுக்கான கடும் பற்றாக்குறையைக் கருதிற்கொண்டு ஜி.சீ.ஈ. உயர்தரத் தகுதி பெற்றவர்களில் மேலும் ஒரு தொகுதியினருக்கு ஆசிரியர் நியமனம் வழங்கும் முடிவு எடுக்கப்பட வேண்டும். ஏற்கனவே, விளம்பரப்படுத்தப்பட்ட துறைகளுக்கும், விளம்பரத்தில் குறிக்கப்படாத ஏனைய துறைகளுக்கும் சேர்த்து இவ்வாசிரியர் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

(இ) ஆங்கில ஆசிரியர் நியமனத்துக்கான அடிப்படைத் தகுதியாக ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் ஆங்கிலம் ஒரு பாடமாக உட்பட மூன்று பாடங்களில் சித்தி அல்லது ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில மொழி மூலத்தில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருக்கவேண்டும் என்று விளம்பரத்தில் கோரப்பட்டது. இது யதார்த்தமற்றதாகும். மேற்கூறப்பட்ட தகுதிகளைக் கொண்டவர்களாக ஒரு சிலரே இருப்பர். அத்துடன், வடக்கு - கிழக்கில் காணப்படும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஏற்ப ஒத்துவராத தொகையாக இது அமையும். பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழு, ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் மூன்று சித்திகளும் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில மொழியில் அதிவிசேட சித்தியும் அல்லது ஆங்கில இலக்கியத்தில்



திறமைச் சித்தியும் பெற்றிருக்கவேண்டும் என்று முன்னர் தீர்மானித்திருந்தது. இது நடைமுறைச் சாத்தியமான நிபந்தனையாகும். வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களும், ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஆங்கில மொழியில் அதிவிசேட சித்தி பெற்றவர்களும், நியாயமான தொகையினர் ஆங்கில ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றர். ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் 3 சித்திகளுடன் சாதாரண தரத்தில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தி பெற்றவர்களும் பணிபுரிகின்றார்கள். வடக்கு - கிழக்கில் பல்வேறு மாவட்டங்களில் பல ஆண்டுகளாக, ஒப்பந்த அடிப்படையில் இவர்கள் பணி புரிகின்றார்கள்.

ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களை நிரந்தரமாக்கக்கூடிய திட்டம் ஒன்றைத் தயாரிக்க வேண்டும் என்று சில காலத்துக்கு முன் நாம் உங்களைக் கோரியிருந்தோம். அவர்கள் பல ஆண்டுகளாகச் சேவையாற்றி வருவதால், நியமனம் வழங்கும்போது வயதெல்லையை, அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியச் சேர்ந்த திகதியிலிருந்து கணிக்க வேண்டும் என்று நாம் யோசனை கூறியிருந் தோம். இவ்விடயம் குறித்து இன்னமும் இறுதிமுடிவு எடுக்கப்படாமல் இருக்கிறது' விரைவில் இறுதி முடிவு எடுக்கப்படவேண்டும். தற்போது வெளியிடப்பட்ட விளம்பரத்தின்படி, ஆங்கில ஆசிரியர் நியமனத்தில் எதிர்பார்க்கப்படும் முடிவுகள் கிடைக்காது என்று எனக்கு முறைப்பாடு தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஆகவே, வடக்கு - கிழக்கில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவது குறித்து மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

(ஈ) வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்மொழி ஆசிரியர் சேர்ப்புப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடத் தப்படும் என்று விளம்பரத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது. இதற்கு வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் சுமார் 50 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பில் மாத்திரம் பரீட்சை நிலையத்தை அமைப்பது, வடக்கு - கிழக்கைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளுக்குப் பெருஞ் சிரமங்களை ஏற்படுத்தும் பரீட்சைத் திணைக்களம் கடைப்பிடித்து வந்துள்ள அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிராக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது. ஆகவே, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் இப்பரீட்சை நடத்தப்படவேண்டும்.

(உ) நீண்டகால தாமதத்தின் பின்னர், வடக்கு - கிழக்கு தமிழ் மொழிமூல பாடசாலைகளுக்கு ஆசிரியர் நியமனங்கள் செய்யப்படவிருப்பதால், ஆசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான வயதெல்லையில் சில மாற்றங்கள் செய்யப்படவேண்டும். தற்போது ஆகக்கூடிய வயதெல்லை 30 என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தொழில் வாய்ப்பின்றி, வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் இளைஞர்கள் கஷ்டப்பட்டுள்ளார்கள் என்பதைக் கருத்திற் கொண்டு ஆகக் கூடிய வயதெல்லையை நிர்ணயித்து நியாயமான மாற்றம் செய்யப்பட வேண்டும்.

(ஊ) ஆரம்பக் கல்வி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தமிழ்மொழி உட்பட மூன்று பாடங்களில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட் சையில் சித்திபெற்றிருக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தமிழ் மொழியை ஒரு பாடமாக எடுக்காமல் கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்றவர்கள் விண்ணப் பிப்பதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளனர்.

தமிழ்மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறை வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் மொழி மூல மாணவர்களின் கல்வியின் தரத்தில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்கக் கூடாது. ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பரிசீலனை செய்தால், வடக்கு - கிழக்கு மாகாணத் தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் பார்க்க, 'இசற் ஸ்கோர்' வெட்டுப்புள்ளியில் குறை வானதாகக் காணப்படுகின்றன. யாழ். மாவட்டம் கூட முன்னைய வருடங்களில், கொழும்புடன் மட்டும் தான் போட்டியிட்டது. இன்றைய நிலைவரப்படி, நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள மாவட்டங்கள் யாழ்ப்பாணத்துடன் போட்டியிடுகின்றன.

இந்த நிலைக்கு வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற யுத்தம்தான் முழுக் காரணம் என்று கூறமுடியாது. தற்போது நிலவும் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கான கடும் பற்றாக்குறையும், கணிசமான அளவு காரணமாகின்றது. வடக்கு - கிழக்கின் கல்வித்தரம் ஆரம்பநிலை தொடக்கம் இடைக்கல்வி வரை மோசமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இது ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு அகில இலங்கை ரீதியில், திறமையின் அடிப்படையில், 40 சதவீத அனுமதி வழங்கப்படுகின்றது. வடக்கு - கிழக்கு தமிழ் மொழிமூல மாணவருக்கு எதிராக நீண்டகாலமாகக் காட்டப்பட்டுவந்த பாரபட்சமான போக்கு, அவர்களால் கல்வியில் சமத்துவ நிலை, கல்வியில் சமவாய்ப்பு ஆகியவற்றைப் பெறமுடியாத நிலையை உருவாக்கியுள்ளது. குழந்தையின் அடிப்படை உரிமை கல்வியாகும்.

வடக்கு - கிழக்கில் தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கு 4 ஆயிரத்து 221 வெற்றிடங்கள் உள்ளன. மாகாணப் பாடசாலைகளில் 4 ஆயிரத்து 26 வெற்றிடங்களும், தேசியப் பாடசாலைகளில் 195 வெற்றிடங்களும் காணப்படுகின்றன. நாட்டின் ஏனைய பகுதிகளில் சிங்கள மொழிமூல பாடசாலைகளில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான சிங்கள மொழிமூல ஆசிரியர்கள் மேலதிகமாகப் பணி புரிகின்றனர். சில மதிப்பீடுகளின்படி இந்த எண்ணிக்கை சுமார் 10 ஆயிரம் என்று கூறப்படுகிறது. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சிங்கள மொழிமூல ஆசிரியர்களுக்கு 199 வெற்றிடங்கள் உள்ளன. இவற்றில் 158 வெற்றிடங்கள் மாகாணப் பாடசாலைகளிலும் 41 வெற்றிடங்கள் தேசியப் பாடசாலைகளிலும் உள்ளன.

வடக்கு - கிழக்கில் தேவையான தமிழ்மொழிமூல ஆசிரியர்களை நியமிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். தமிழ்மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறை பற்றிய பிரச்சினை குறித்து கவனம் செலுத்த சிரேஷ்ட அரச அதிகாரி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக முழுமையாகப் பரிசீலனை செய்ய ஜனவரி நடுப்பகுதியில் மாநாடு ஒன்றைக் கூட்ட நடவடிக்கை எடுங்கள். தமிழ் மொழிமூலமான ஆசிரியர் நியமனத்தில் காட்டப்பட்டுவந்த நீண்ட தாமதம் இனியும் தொடரக்கூடாது.

- இவ்வாறு சம்பந்தன் எம்.பி. பிரதமருக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# களுவாஞ்சிகுடி பஸ் டிப்போ ஊழியர்கள் நேற்று முதல் வேலை நிறுத்த போராட்டம்

களுவாஞ்சிகுடி நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி தொழிலாளர்கள் வேலைப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர். சுமார் 110தொழிலாளிகள் வேலைப் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டதுடன் பதாதைகள் தாங்கிய வண்ணம் தங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை ஆர்ப்பாட்டத்தைத் தொடர்வதாக தேசிய ஊழியர்கள் சங்கத்தின் போசகரும் பொருளாளரும் ஆன கைலாசபிள்ளை உருத்திரமூர்த்தி தெரிவித்தார்.

களுவாஞ்சிகுடி சாலையில் கடமைபுரியும் தொழிலாளர்களாகிய எங்களுக்கு கார்த்திகை மாத சம்பள முற்பணமும், மிகுதிச் சம்பளமும் இதுவரை கிடைக்கவில்லை. மார்கழி மாத சம்பள முற்பணமும் இதுவரை கிடைக்கவில்லை. எங்கள் குடும்ப நிலை மிகவும் மோசமான நிலையில் உள்ளது சம்பளம் இல்லாமல் 64நாட்கள் தங்கள் வாழ்க்கையை எப்படி நடாத்துவது நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் எங்கள் கொடுப்பனவுகள் கிடைக்கும் வரை வேலை நிறுத்தத்தைத் தொடர்வோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சாலையின் இரு நுழைவாயில்களும் பூட்டுப் போட்டு மூடப்பட்டிருந்தன. ஊழியர்கள் காலை உணவுகளை வீதியில் நின்று உண்பதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. களுவாஞ்சிகுடிப் பகுதியில் பஸ்தரிப்பிடங்களில் அதிகளவு பயணிகளைக் காணக் கூடியதாக இருந்தது.

இதேவேளை களுவாஞ்சிகுடி பஸ் சாலையில் 26 பஸ் வண்டிகள் உண்டு பஸ்கள் உடைந்த நிலையில் உள்ளன. சீரான சேவையை வழங்குவதாயின் 17பஸ்கள் தேவை இருந்த போதும் 7பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப்படுவது வழக்கம். படுவான்கரை சேவைக்கான பஸ் நான்கு, தூர சேவைக்கான பஸ் இரண்டு டிப்போவின் தற்போதைய அவல நிலையே வருமான குறைவுக்குக் காரணம் எனவும் உரிய நேரத்தில் சம்பளத்தை வழங்க முடியாது உள்ளதாகவும் டிப்போவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இன்றைய ஆர்ப்பாட்டத்திற்கான மகஜர்கள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை, சேமன், முகாமைத்துவப் பணிப்பாளர், பொலிஸ் உத்தியோகஸ்த்தர் இலங்கை போக்குவரத்து சபைத் தலைவர் கொழும்பு, போக்குவரத்து அமைச்சர் மற்றும் விடுதலைப்புலிகள் வாகனப் பொறுப்பாளர் இதயன்(தனு) ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ள தாக உருத்திரமூர்த்தி தெரிவித்தார்.

# சமுர்த்தி முகாமையாளர் இடமாற்றம் இரத்து

(ஜீவா)

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பிரதேச செயலகங்களில் ஐந்து வருடங்களுக்கும் மேலாகக் கடமையற்றிய அனைத்து சமுர்த்தி முகாமையாளர்களையும் புத்தாண்டு முதல் இடமாற்றுவதற்காக அரச அதிபர், மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் பிரதேச செயலாளர்களின் ஒரு முகப்பட்ட நடவடிக்கையால் வழங்கப்பட்ட இடமாற்றக் கடிதங்க ள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டு ள்ளன.

சமுர்த்தி முகாமையாளர்களிடம் முன்னுரிமை அடிப்படையில் சேவையாற்ற விரும்பும் பிரதேச செயலகங்கள் கோரப்பட்டுள்ளது. ஆயினும் அதிகமானோர் வசதியான கஷ்டமற்ற பிரதேசங்களில் பணியாற்றவே விருப்பம் தெரிவித்துள்ளனர். மேலும் பலர் தமது குடும்ப நிலைக்கஷ்டம், மணைவியின் நோய் வாய்ப்பு, மன்னவியின் வேலை ஸ்தலம் போன்ற காரணங்களையும் முன்வைத்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் கஷ்டப் பிரதேச செயலகங்களாகவுள்ள பொத்துவில், திருக்கோவில், நாவிதன் வெளிக்கு இவர்கள் பலர் கடமைக்குச் செல்லத் தயக்கம் காட்டி வருகின்றனர். ஆயினும், சமுர்த்தி முகாமையாளர்களது இடமாற்றம் புதிய ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் மார்ச் 1ம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக சமுர்த்தி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சில பிரதேச செயலகங்களில் இடம் பெற்ற சமுர்த்தி அபிவிருத்தித் திட்டங்களின் பல ஊழல்களும், மோசடிகளும் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டமையால் கட்டாய இடமாற்றம் செய்ய வேண்டிய அவசியமுள்ளதாக மேலும் அவ்வதிகாரி தெரிவித்தார். இவ்விடமாற்ற ரத்து குறித்து தற்சமயம் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் அனேக முகாமையாளர்கள் மிகுந்த கவலையும், விசனமும் தெரிவித்துள்ளனர்.

# ஆசிரியர் கொடுப்பனவில் மோசடி செய்த அதிபர் இடைநிறுத்தம்

(ஜீவா)

பொத்துவில் கல்விக் கோட்டப்பாடசாலையான கோமாரி மெதடிஸ்த மிஷன் பாடசாலை சம்பளப் பட்டியல் மூலம் ஆசிரியர்களது நிலுவைக் கொடுப்பனவுப் பணம் சுமார் ஏழு லட்சம் ரூபாவை கோட்டப்பணிமனை அலுவலர்களின் உதவியுடன் கைமாறி மோசடி செய்த அதிபர் எட்வேட் ஞானராஜா பதவியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இக்கோட்டத்தில் சுமார் 22ஆசிரியர்களுக்கான மேலதிகக் கொடுப்பனவ்வுகள், பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்ச்சிக்காக வழங்கப்படவுள்ள நிலையில் 2003ம் ஆண்டு தை மாதம் முதல் ஆடி மாதம் வரை மாதாமாதம் குறிப்பிட்ட சில ஆசிரியர்களது நிலுவைப்பணத்தை கோமாரிமெதடிஸ்த மிஷன் பாடசாலை சம்பளப்பட்டியல் மூலம் பெற்று வந்தமை கோட்டப்பணிமனை பெண் ஊழியரால் கண்டுபிடிக்கப்பட்டு வலயப் பணிமனை கணக்காளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நடவடிக்கை எடுக்க வலய பணிமனை அதிபரிடமிருந்து சுமார் மூன்று லட்சத்து நாற்பதாயிரத்தை மீளப்பெற்றுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வலயப்பணிமனை மேலதிகக் கல்விப் பணியாளர் திருமதி லோவநாதசிறி சக்கரியா நிருவாக உத்தியோகத்தர் விசாரணைகளை மேற்கொண்டு மாகாண சபைக்கு அறிக்கை சமர்ப்பி த்ததையடுத்து இவ்விடை நிறுத்தம் வழங்கப்பட்டுள்ளது. இவ்விடயத் துடன் தொடர்பு பட்டதாகக் கருதப்ப டும் ஏனைய அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனராயினும், மாகாண சபையினால் மேலதிக விசாரணை நடைபெறவுள்ளதாகவும் தெரிகிறது.

மேலும், இவ்விடயத்துடன் தொடர்புபட்டதாகக் கூறப்படும் நிதி உதவியாளர் எற்கனவே பல குற்றங் களில் ஈடுபட்டும், 1994ல் பொத்துவில் கோட்ட ஆவணங்களை எரித் தவர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட நிலையிலும் மீண்டும் பொத்துவில் கோட்டத்தில் பணிக்கமர்த்தியது தொடர்பாக வலயக் கல்வி அதிகாரிகள் மீதும் ஐயம் எழுந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# மதுபோதையில் கிராம சேவகரைத் தாக்கியவர் பொலிசாரால் கைது.

(ஜீவா)

திருக்கோவில் செயலகப்பிரிவிற்குட்பட்ட தாண்டியடி கிராம சேவையாளர் உ.உதயகுமார் 29.12.2003 மாலை கடமை புரிந்து வீடு திரும்புகையில் அக்கராமத்தில் வைத்து மதுபோதையில் காணப்பட்ட நாகலிங்கம் தர்மலிங்கம் (36) என்பவரால் பொல்லால் தாக்கப்பட்டு திருக்கோவில் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இச்சம்பவம் தொடர்பாக அறிக்கையில்:- குறித்த நபர் தனது 4 பிள்ளைகளையும் மனைவி கேதாரம் கௌரி தேவியையும் விட்டுப் பிரிந்து ஜீவனாம்சம் கொடுத்து வந்துள்ளார். கடந்த இரு வருடமாக எதுவிதக் கொடுப்பனவும் தனது மனைவி பிள்ளைகளுக்கு வழங்காமல் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தவர் மனைவியுடன் தினம் மது போதையில் தகராறு செய்து கொலை மிரட்டல்களும் விடுத்துள்ளார். இந்நிலையில் கிராமசேவகரிடம் முறையிட்ட பெண்ணிடம் சட்ட நடவடிக்கை எடுத்தல் தொடர்பான வழிமுறைகளை கிராம சேவகர் வழங்கியதற்கு பழிதீர்க்கும் முகமாகவே இச்சம்பவம் இடம்பெற்றதாக அறியப்படுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்த திருக்கோவில் பொலிசார் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். இதனிடையே இச்சம்பவத்திற்குக் கண்டனம் தெரிவித்தும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தித் தரும் திருக்கோவில் செயலக கிராம சேவையாளர்கள் அனைவரும் 31ம் திகதி அடையாள வேலைப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளனர்.

## சித்தாண்டி ஸ்ரீ முருகன் ஆலயத்தில் வேலுக்குப் பட்டு

மட்.. சித்தாண்டி வாழ் விவசாய பெருங்குடி மக்கள் ஒன்று கூடி வான் மழையை நம்பி செய்கை பண்ணிய விவசாய நிலங்களின் பரிதாப நிலையை எண்ணி கவலைப்பட்டு சித்தாண்டி ஸ்ரீ முருகப் பெருமானை வேண்டி பிரார்த்தனை செய்தனர். மழை பெய்யாது போனால் பெரும் போகச் செய்கை [illegible] அளவில் வயல் நிலங்களில் [illegible] வரட்சி காணப்படும் [illegible] இதனால் மிகப்பாரிய நஸ்டம் கிழக்கு மாகாணத்தில் ஏற்படுவ[illegible] தவிர்க்க முடியாது என்றும் கவலை தெரிவித்தனர். இதனைத்தடுக்கும் பொருட்டு சித்தாண்டி ஸ்ரீ முருகப் பெருமான் ஆலய வேலுக்கு விசேட பூசையும், கூட்டுப்பிரார்த்தனையும் நேர்த்தி வைத்து வேலுக்குப்பட்டுக் கட்டுதல் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது,

# தேசப்பற்றுடன் ஒவ்வொருவரும் பணிபுரிய வேண்டும்

(அரியம்)

இவ்வருடம் சகல ஊழியர்களும் கடமை உணர்வுடனும், அற்பணிப்புடனும், தேசப்பற்றுடனும் கடமை புரிய உறுதிபூண வேண்டுமென மண்முனை தென்மேற்குப் பிரதேசசெயலாளர் எஸ்.அமலநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று முன்தினம் 1ம்திகதி பட்டிப்பளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற பட்டிப்பளை பிரதேச செயலக அலுவலர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு புத்தாண்டு வாழ்த்து கூறும் விசேட நிகழ்வில் உரையாற்றிய பட்டிப்பளை பிரதேச செயலாளர் எஸ்.அமலநாதன் தொடர்ந்து கூறுகையில்:

கடந்த ஆண்டு இருந்த நிர்வாக நடைமுறையினை விட 2004ம் ஆண்டு நடைமுறைகள் மாறுபட்டதாக அமையும், ஒரு வாகனம் ஓடும் போது வாகனத்தில் சில கீறல்கள் விழத்தான் செய்யும் அதே போன்றுதான் நிர்வாகத்தில் சில குறைபாடுகள் எழலாம். அதனை நிவர்த்தி செய்து கடந்த வருடங்களில் நாம் விட்ட தவறுகளை நினைத்து மறுமலர்ச்சி பெற்று கடமை உணர்வுடன் இவ்வருடம் செயற்பட வேண்டும், ஒரு அலுவலக நிர்வாகம் என்பது ஒரு குடும்பத்திற்குச் சமன் ஒரு குடும்பம் போன்று நாம் செயல்பாடுவோ மானால் எந்தப் பிரச்சினைகளையும் இலகுவில் தீர்வு காணலாம் எனவும் மேலும் கூறினார்.

இந்நிகழ்வில் உத வித் திட்டப்பணிப்பாளர் மு.சிவராசா உட்பட பலரும் உரையாற்றினர்.

# இந்துக்களால் நத்தார் பண்டிகை பக்தி பூர்வமாக அனுஷ்டிப்பு

(கல்லடி நிருபர்)

சிறிலங்காவின் தென்பகுதியில் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலங்கள் மற்றும் நிலையங்கள் மீது அண்மைக்காலமாக பௌத்த சிங்கள வெறியர்கள் மிலேச்சத்தனமாக தாக்குதல்கள் நடாத்தி வரும் இன்றைய சூழ்நிலையில் தமிழர் தாயகத்தில் இயேசு கிறிஸ்து நாதரின் ஜயந்தி தினமான நத்தார் பண்டிகை தமிழ் இந்துக்களால் பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட சம்பவமொன்று நடந்தேறியிருக்கிறது.

மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் ஸ்ரீ சப்தரிஷிகள் வளாகத்திலேயே இந்த சமய சமரச நிகழ்வை ஸ்ரீ காயத்திரி சித்தர் ஆர்.கே. முருகேசு சுவாமிகள் முன்னின்று நடாத்த வைத்தார்.

நத்தார் பண்டிகை தினமான கடந்த 25.12.2003 ( வியாழக்கிழமை) சரியாக நள்ளிரவு வேளையிலே கிறிஸ்தவர்களைப் போலவே நூற்றுக்கணக்கான ஆண், பெண் காயத்திரிஅடியார்கள் அந்த வளாகத்தின் யாக சாலையில் திரண்டனர்.

அங்கு முருகேசு சுவாமிகள் இயேசு நாதரின் திருவுருவப் படத்தை அலங்கரிக்கப்பட்ட மேடையில் எழுந்தருளப்பண்ணி மலர் மாலை சூட்டி, மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட குத்து விளக்கில் தீபம் ஏற்றி வழிபாட்டைத் தொடங்கி வைத்தார்.

அடியார்கள் சூழ இருந்து இந்து மத கலாசாரப்படி தியானம், பஜனை, மௌன பிராத்தனைகளில் பக்தி பூர்வமாக ஈடுபட்டனர்.

முருகேசு சுவாமிகள் அருளுரை வழங்குகையில் குறிப்பிட்டதாவது:-

இயேசு பிரான் கௌதர



புத்தர் முதலான மதப் போதகர்களையும், காயத்திரி அடியார்கள் நமது மகரிஷிகள் போன்றே மதிக்க வேண்டும். வேற்றுமை பாராட்டக் கூடாது உலக நன்மைக்காகவே அவர்களும் போதித்தார்கள். இயேசு பிரான் உலகிற்கு சமாதானத்தைக் கொண்டு வருவதற்காகவே அவதரித்தார். நம் நாட்டிலும் உலகம் முழுவதும் இப்போது சமாதானத்துக்காகவே ஏங்கிக் கொண்டிருக்கிறோம். நாம் மாதாந்தம் உலக சாந்தி, சமாதானம், நன்மைக்காக நமது மகரிஷிகளை முன்னிட்டு யாகம் செய்து வருகின்றோம். நத்தார் பண்டிகையை அனுஷ்டிப்பது போலவே புத்தர் பெருமானின் வெசாக் தினத்தையும் நமது காயத்திரி ஆச்சிரமங்களில் அனுஷ்டிக்க நாம் ஏற்பாடு செய்திருக்கின்றோம். வேறு எந்த இந்து மத வழிபாட்டுத் தலங்களிலும் இது போன்ற சர்வமத சமாதான கிரியைகள் நடைபெறுவதில்லை என்று முருகேசு சுவாமிகள் தனது அருளுரையில் விபரித்தார்.

# புத்தாண்டு வாழ்த்துக்களுக்கு தேசியத் தலைவர் நன்றி தெரிவிப்பு!

(நமது நிருபர்)

மக்களும், புலம்பெயர்ந்து உலகம் எங்கும் வாழும் மக்களும் புலிகளின் குரல் ஊடாக வழங்கிய பிறந்த நாள் வாழ்த்துக்களுக்கு தேசியத் தலைவர் நன்றிகளை தெரிவித்துள்ளார். கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் நாள் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கு 49 ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்களை புலிகளின் குரல் ஊடாக தமிழ் மக்கள் தெரி வித்திருந்தனர்.

இந்த வாழ்த்துக்களுக்கு தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தமது நன்றிகளை தெரிவிப்பதுடன் அனைத்து தமிழ் மக்களின் மனங்களையும் இறுக பற்றி நிற்கின்றார்.

இந்தப் புத்தாண்டில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் சார்பில் புலிகளின் குரல் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

# பேச்சுவார்த்தையின் இறுதி நிகழ்ச்சி நிரலில் மலையகத்தவர் பிரச்சினைகளும் உள்ளடக்கப்பட வேண்டும்!

(நமது நிருபர்)

சமாதான பேச்சுவார்த்தையின் இறுதி நிகழ்ச்சி நிரலில் மலையக மக்களின் பிரச்சினைகளும் உள்ளடக்கப்பட வேண்டும் என புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திடம் மலையக மக்கள் முன்னணி தலைவரும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான பெ. சந்திரசேகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

லண்டன் சென்றுள்ள அமைச்சர் சந்திரசேகரன் நேற்று முன்தினம் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து பேசியபோதே மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

இச்சந்திப்பு தொடர்பாக மலையக மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:- இலங்கையில் முழு அதிகாரமுள்ள மக்களின் ஆணையைப் பெற்ற அரசோடுதான் இனிமேல் தாங்கள் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் இச்சந்திப்பின்போது தெரிவித்தார்.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது ஒரு தரப்பாகவும் பாதுகாப்புத்துறை வேறொரு தரப்பிலும் இருப்பது சமாதான பேச்சுவார்த்தைக்கு நடைமுறை சாத்தியமற்றதாக உள்ளது எனவும் இதனை நோர்வே உட்பட சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யுத்த நிறுத்தம் ஏற்படுவதற்கு முன்பே சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை அரசிற்கு புலிகள் ஏற்படுத்தி இருந்ததாகவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட பின்பு புலிகள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றார்கள் என்றும் குறிப்பிட்டார்.

அதே நேரம் தங்களுடைய 20 வருட கால போராட்டம் பெற்றுத்தரும் தீர்வு தமிழ் மக்களின் முழுமையான அபிலாசைகளை பூர்த்தி செய்வதாக அமைய வேண்டும் என்பதில் புலிகள் உறுதியாக உள்ளனர்.

பேச்சுவார்த்தையின் இறுதிநிகழ்ச்சி நிரலில் மலையக மக்களின் பிரச்சினையும் உள்ளடக்கப்பட வேண்டும் என அமைச்சர் பெ. சந்திரசேகரன் இச்சந்திப்பின போது கேட்டுக் கொண்டார்.

# ஜனாதிபதியின் இரகசிய பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல!

(நமது நிருபர்)

" சூழ்ச்சி மூலம் தனது ஆட்சிக் காலத்தை நீடிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சித்தால் அதற்கு இடமளிக்கமாட்டோம்.'' அமைச்சரவை முடிவுகளை வெளியிடுவதற்காக நேற்றுக் கூட்டப்பட்ட வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச் சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

1999 ஜனாதிபதித் தேர்தல் மூலம் 2005 வரை ஆறு ஆண்டுகள் ஜனாதிபதியாகப் பணியாற்றவே மக்கள், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அனுமதி அளித்துள்ளனர். அதற்கு அமையவே அவர் பகிரங்கமாக சத் தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார். ஆட்சிக் கவிழ்ப்போ, பதவியிழப்போ இடம் பெறாத நிலையில் மீண்டும் - இடையில் சத்தியப் பிரமாணம் செய்ய வேண்டிய தேவை ஏதும் அவ ருக்கு எழவில்லை.

ஜனநாயக நாடு ஒன்றில் ஜனாதிபதி ஒருவர் - மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் - இரகசி யமாகப் பதவிப் பிரமாணம் செய்வது என்றோ, செய்தார் என்றோ கூறு வது ஏற்றுக் கொள்ளத்தக்க தல்ல.

அப்படி இரகசியமாகச் செய்திருந்தாலும்கூட, அதை அமைச்சரவைக்குத்தன்னும் கூறவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

எனவே, அப்படி ஒரு சத்தியப்பிரமாணம் நடந்ததாகக் கூறப்படுவது உண்மையா அல்லது பொய்யா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. வெறுமனே அப்படி ஒரு சத்தியப்பிரமாணம் இடம் பெற்றது என்று இப்போது வந்து கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

தனது சூழ்ச்சி மூலம் மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்று ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஜனாதிபதி எடுத்த நாடகம் - முயற்சி - தோல்வியில் முடிவடைந்துவிட்டது. அவர் எதிர்பார்த்தபடி ஆளும் தரப் பிலிருந்து எம்.பிக்களை கவர்ந்திழுக்க அவரால் முடியவில்லை.

அந்தத் தோல்வியைச் சமாளிப் பதற்காகப் புதிய புரளியை அவர் இப் போது கிளப்பிவிடுகின்றார்.இவ்வாறு ஜனாதிபதியின் பதவிக்கால நீடிப்புக் குறித்து பல செய்திகள் அடிபட்டபோது அதை ஜனாதிபதி செயலகமோ ஜனாதிப தியோ மறுக்கவுமில்லை: அங்கீகரி க்கவுமில்லை.

ஜனாதிபதியின் பதவிக் காலம் உரிய ஏற்பாடுகளின்படி 2005 டிசெம்பருடன் முடிந்துவிடும். தன்னிச்சையாக ஜனாதிபதி அதனை நீடிக்க முடியாது. அப்படி நீடிக்க முயன்றால் மக்கள் சக்தியைத் திரட்டி எமது எதிர்ப்பைக் காட்டி, அந்த முயற்சியை முறியடிப்போம். ஆட்சியில் அளவுக்கு அதிகமாக ஒருநாள் தன்னும் அவர் நீடிக்க அனுமதிக்கமாட்டோம் - என்றார் அமைச்சர் பீரிஸ்.

# கூட்டனி இனிமேல் தனித்தே போட்டியிடும் என்கிறார் சங்கரி!

(நமது நிருபர்)

விரைவில் வரும் என எதிர்பார்க் கப்படுகின்ற பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு புலிகளுடன் இணைந்து போட்டியி டுமானால் தமி ழர் விடுதலைக் கூட்டணி வடக்கு - கிழக்கில் தனித்துத் தேர்தலில் நிற்கும்.

கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி எம்.பி. சிங்களத் தினசரியான திவயின'வுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.தமிழர் விடு தலைக் கூட்டணி என்ற பெயர் வட க்கு - கிழக்கு பெரும் பான்மை மக்களின் உள்ளத்திலிருக் கும்வரை வேறு கட்சிகளின் சின்னத் தின் கீழோ அல்லது சுயேச்சைக் குழுவிலோ போட்டியிடும் தேவை தமக்கு ஏற்படாதெனவும் அவர் அப்பத்திரிகையில் அறுதியிட்டுக் கூறியுள்ளார். நான்கு கட்சிகளை இணைத்து கடந்த பொதுத் தேர்தலின் போது உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு இப்போது முழுமையாக புலிகளின் கைகளில் இருக்கின்றது என்று அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.

# பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கல்விப் பொறுப்பாளரை வன்னியில் சந்தித்தார்

(நமது நிருபர்)

வடக்குக்கு இரு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யூ ஏ.மகிந்த விஜயசிறி தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரனை நேற்றுச் சந்தித்து இரு மணிநேரம் கலந்து ரையாடினார்.

ஏ-9 பாதை ஊடாக வந்த அவர் கிளிநொச்சியில் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரனையும், வன்னி மாவட்ட கல்விப் பணிப்பாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.ஆணையாளருடன், பிரதி பரீட்சை ஆணையாளர் போல் அன் ரனி, முன் னாள் பிரதிப் பரீட்சை ஆணையாளர் குலதுங்க ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். பரீட்சைத் திணைக்களம் மீது பெரிய அளவில் குற்றச்சாட்டு க்கள் இல்லை என்று தெரிவித்த இளங்குமரன் திணைக்களத்துக்கு தமிழ்மொழி மூலமான அதிகாரிகள் கூடுதலாக நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இரகசியம் பேணக்கூடிய அதிகாரிகளைச் சிபார்சு செய்தால் அவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆணையாளர் அப்போது பதில் அளித்தார். தொடர்ந்து கல்வி அமைச்சு மீது பல குற்றச்சாட்டுகளை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினார் இளங்குமரன். இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆணையாளர் நாயகம் வியப்புத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் வருகை தந்த ஆணையாளர் வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வியாளர்களைச் சந்தித்தார்.ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சை விடை த்தாள் மதிப்பீடு செய்யும் பணி களை பார்வையிட்ட ஆணையாளர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்த விடயங்கள் வருமாறு.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு தமிழ் மொழி மூலம் ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக கப்பட வுள்ளனர். இவர்களுக்கான போட்டிப் பரீட்சைகள் கொழும்பில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இப்பரீட்சையை யாழ். மாவட்டம் உட்பட வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களிலும் நடத்த எமக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை விடைத் தாள்கள் மதிப்பீட்டுப்பணிகள் தற் போது யாழ். மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

இப்பணி தொடர்ந்தும் இங்கு இடம் பெறும். அது மட்டுமல்லாது ஜி.சீ.ஈ உயர்தர விஞ்ஞான பாடபரீட்சை விடைத்தாள்களையும் இங்கு வைத்து மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பிரதி பிரதம பரீட்சை ஆணையாளர் நாயகம் போல் அன்ரனி, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ், பேராசிரியர்களான பொன் பால சுந்தரம்பிள்ளை, அ.சண் முகதாஸ், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலா சாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க சிரேஸ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் உட்பட மற்றும் பலரும் கலந்துகொண்டனர்

# தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் விண்ணப்ப திகதி நீடிப்பு!

(நமது நிருபர்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள பாடசாலைகளுக்கான ஆசி ரியர்களை சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்ப திகதி ஜனவரி 23 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, போட்டிப்பரீட்சைவடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ளஎட்டு மாவட்ட ங்களிலும் நடை பெறும் முன்னர் இந்தப் போட்டிப் பரீட்சையை கொழும்பில் மட்டும் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.மகாசிவம் நேற்று கல்வி, மனிதவள அபிவிருத்தி அமைச்சின் சிரேஸ்ட செயலாளர் ஏ.திஸாநாயக்காவுடன் நடத்திய கலந்துரையாடலை அடுத்து மேற்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இதேவேளை - சங்கீதம், நடனம், சித்திரம், உடற்கல்வி, மனைப்பொருளியல், விவசாயம், கடல்வளத்தொழில்நுட்பம் ஆகிய பாடங்களைப் போதிக்கவும் ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

முன்னர் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், ஆரம்பக்கல்வி ஆகியநான்கு பாடங்களுக்கு மாத்திரமே ஆசிரியர்களை நியமிப்பதற்குவிண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

# வலுவிழுந்தோர் சிறப்பான ஆற்றல்களை கொண்டிருக்கிறார்கள்!

(நமது நிருபர்)

வலுவிழந்தவர்கள் சிறப்பான ஆற்றல்களைக் கொண்டிருப்பார்கள். அவற்றைப் பயன்படுத்தி தமது வாழ்க்கையை அவர் கள் சுயமாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

சமூக உளவள ஆலோசகர் டாக்டர் வி.அனவரதன் இவ்வாறு அறிவுறுத்தினார். வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச வலுவிழந்தோர் தின நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் கலந்து கொண்டு, வலுவிழப்பு வாழ்வின் முன்னேற் றத்துக்குத் தடையல்ல' என்ற தலைப்பில் டாக்டர் வி.அனவரதன் உரையாற்றினார்.

அவர் தமது உரையில் கூறியதாவது:- ஊனமுற்றவர், வலுவிழந்தவர் என்ற சொற்பதங்கள் சம்பந்தப்பட்டவர்களிற்கு உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்ப டுத்தும். இதனால் அவர்களை வித்தியாசமுடைய ஆற்றலுடையோர்'' என அழைப்பதே சிறந்தது. குறைபாடு உடையவரை ஒரு பொம்மை போல இருத்திவைத்து அவருடைய அனைத்துத் தேவைகளையும் நாம் செய்துகொடுப்பது அவர்களிற்கு உளவி யல்ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தும். இந்தநிலை மாறவேண்டும். வலு என்பது எமது மனதைப் பொறுத்தது. தான் முன்னேற வேண்டும் தமது முயற்சியில் வெற்றி பெறவேண்டும் எனக்கருதிச் செயற்பட்டால் எந்த ஊனமும் ஒருவருக்கும் தடையாக இருக்காது.

அமெரிக்காவில் கால்கள், காதுகள் செயலிழந்து கைக ளும் மூளையும் மட்டுமே செயற்படும் ஒருவர் அதி நவீனமான விமானம் மற்றும் அதிவேக ரயில் ஆகியவற்றின் தொழில் நுட்பங்களைப் பௌதீகவியல் விளக்கங்களை வழங்கி வருகிறார். அவரது மன உறுதி அவரது ஊனங்களை வென்றுவிட் டது. கால் ஊனமுற்ற ஒருவர் தமது மனவலிமையால் எவரஸ்ட் சிகரத்தை ஏறி முடித்துள்ளார்.

ஊனமுற்ற பலர் தமது முயற்சியால் பின்னல் வேலை செய்தல், ஓவியம்வரைதல், கடதாசிப் பைகள் செய்தல் போன்ற பல தொழில்களைச் செய்துவருகின்றனர்.எனவே, வலுவிழந்தவர்கள் அதனைத் தமது முன்னேற் றத்திறகுத் தடையாகக் கருதக்கூடாது. பிறரில் தங்கியோ சமூகத்தில் இருந்து ஒதுங்கியோ வாழாமல் மன உறுதியுடன் செயற்படவேண்டும். தமது ஆற்றல்களைப் பயன்படுத்தி சுய மாக வாழப்பழகிக் கொள்ள வேண்டும். - இப்படி அவர் அறிவுறுத்தினார்.


பிரதேச செயலர் எஸ். திருவாகரன் தமது தலைமையுரையில், வலுவிழப்பை ஏற்படுத்திக் கொடுத்த இறைவன் அவர் களில் பலரை பலதுறைகளில் மிளிரவைத்துள்ளான். உடலால் ஊனமுற்றவர்கள் உள்ளத்தால் வலுவுடையோராகவும் திகழ்கின்றார்கள். இவர்கள் அனைவரையும் அரவணைத்துச் செயற்படும் தன்மை எமது சமூகத்திற்கு ஏற்படவேண்டும் என்றார்.

பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 30 ஊனமுற் றவர்கள் இந்நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டனர்.

# புதுவருடதினத்தன்று அமெரிக்க பிரிட்டன் விமான சேவை நிறுத்தம்!

வாஷிங்டனில் புது வருடத் தினத்தன்று பயங்கரவாதிகளின் அதிரடித் தாக்குதல்கள் இடம் பெறலாம் என்று அமெரிக்க உறவுப் பிரிவினர் எதிர் கூறியிருந்தனர். இதனால் இங்கிலாந்திலிருந்து வாஷிங்டன் செல்லவிருந்த பிரிட்டிஷ் எயார் வேய்ஸ் விமானம் வியாழக் கிழமை சேவையில் ஈடுபடவில்லை இதனால் அன்று பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்திருந்த பிரயாணிகள் யாவரும் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

வியாழக்கிழமை இரவு 6. 35க்கு புறப்பட வேண்டிய மற்றுமொரு விமானம் இரவு 10. மணிக்குப் பிறகே வொஷிங்கடன் நோக்கிப் புறப்பட்டது. இவ்விமானத்தில் பயணம் செய்யவிருந்த 247 பயணிகளும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன தேசிய பாதுகாப்பு அதிகாரி யொருவர் தகவல் தருகையில் நாங் கள் விமானத்தில் பயணம் செய்யும் ஒவ்வொருத்தரின் நலனினும் அக்கறை கொண்டு



ளோம் என வேதான் பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக ஒவ்வொருவரையும் சோதனைக்குள்ளாக் வேண்டி உள்ளது என்றார் இதே சமயம் விமான நிலையத்தினர் பிரயாணீகளின் அதிருப்திக்கு ஆளாகியுள்ளனர் எனவும் அறியப்படுகின்றது

# அணு நிலையங்கள் பற்றிய தகவல் இந்தியா பாக் இடையே பரிமாற்றம்!

இந்தியா-பாகிஸ்தான் இடையே அணு நிலையங்கள் மற்றும் இது சம்பந்தமாக தொழில்நுட்ப முன்னேற்றம் பற்றி பரிமாற்றம் செய்யப்பட்டது.

இந்தியா-பாகிஸ்தான் இடையே கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட ஒப்பந்தப்படி இரு நாடுகளிடையே உள்ள அணு நிலையங்கள் மற்றும் அணு ஆயுத தொழில் நுட்பத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி பரிமாற்றம் நடைபெற்று வருகிறது. அதன்படி இந்தாண்டும் இரு நாடுகளிடையே அணு ஆயுத நிலையங்கள் பற்றிய பரிமாற்றம் நடந்து உள்ளது. சார்க் மாநாடு தொடங்க இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில் இந்த பரிமாற்றம் நடைபெற்று உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் உள்ள இந்திய ஹைகமிஷன் அலுவலகத்தில் அரசியல் பிரிவு அதிகாரி ஏ.கீதேஷ்சர்மாவை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் அழைத்து அணு ஆயுத நிலையங்கள் பற்றி தகவல்கள் அடங்கிய ஒரு அறிக்கையை கொடுத்தது. இதில் சென்ற ஆண்டு கொடுக்கப்பட்ட விஷயங்கள் தான் உள்ளன என்று அதிகாரப்பூர்வ வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன. அதே மாதிரி புது டெல்லியில் உள்ள பாகிஸ்தான் ஹைகமிஷன் அலுவலக அதிகாரியை இந்திய வெளியுறவு அமைச்சகம் அழைத்து இந்தியாவில் உள்ள அணு நிலையங்கள் பற்றிய தகவல் அடங்கிய அறிக்கை ஒன்றை கொடுத்தது.

# இந்தியா பாக் இடையேயான போர் நிறுத்தத்தை நிரந்தரமாக்க விரும்புகிறோம்

இந்தியா - பாகிஸ்தான் இடையே தற்போது நிலவும் போர்நிறுத்தத்தை நிரந்தரமாக்கிக் கொள்ள இந்தியா விரும்புவதாக மத்திய வெளியுறவு விவகார அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா தெரிவித்துள்ளார்.

இந்திய பாராளுமன்றம் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய பிறகு இந்திய- பாகிஸ்தான் உறவு மோசமானது. அதன் பின்னர் 2 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது உறவு மீண்டும் மலர்ந்து வருகிறது. நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரு நாடுகள் இடையே பஸ்,விமானப் போக்குவரத்து இவையெல்லாம் துவங்கிவிட்டன. ரயில் போக்குவரத்தும் தொடங்க உள்ளது. முன்னதாக ரம்ழானை முன்னிட்டு போர் நிறுத்தம் எல்லைப் பகுதியில் அமுலுக்கு வந்தது. இதனால் எல்லையில் அமைதி ஏற்பட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலும் வன் முறை சம்பவங்கள் குறைந்து ள்ளன.

இதனிடையே சார்க் மாநாட்டுக்காக இந்திய வெளியுறவு விவகார அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா நேற்று சிறப்பு விமானம் ஒன்றில் இஸ்லாமாபாத் புறப்பட்டுச் சென்றார். முன்ன தாக அவர் டெல்லி விமானநிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது;-

இந்தியா-பாகிஸ்தான் இடையே இப்போது நிலவும் தற்காலிக போர் நிறுத்தத்தை நிரந்தரமாக்க இந்தியா விரும்புகிறது. இந்தப் போர்நிறு த்தம் ஒரு மாதம் என்றோ, 6 வாரம் என்றோ, 2 மாதம் என் றோ, கால வரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆகவே இதை நிரந்தரமாக்க இரு நாடுகளும் உத்தரவாதம் அளிக்க வேண்டும். இது தொடர்ந்து நீடிக்க வேண்டும். இவ்வாறு சின்ஹா கூறினார்.

இஸ்லாமாபாத்தில் பிரதமர் வாஜ்பாயும், பாக். தலைவர்களும் சந்தித்து பேசுவார்களா ? என்று கேட்ட போது, மாநாடு என் றால் சந்திப்பு இருக்கத்தானே செய்யும். சுமூகமாக சந்திப்பார்கள், பேசுவார்கள்ா என்று கூறிய சின் ஹா, தனிப்பட்ட சந்திப்பு எதற்கும் திட்டமிடப் படவில்லை என்று கூறி விட்டு புறப்பட்டார்.

அவர் செல்லும் இந்த விமானம் 2 ஆண்டுகளுக்குப் பிறகு பாகிஸ்தானில் தரையிறங்கும் முதல் இந்திய விமானம் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடவுள் மீதும் தலைவிதி மீதும் எனக்கு நம்பிக்கை உள்ளது.

**பிரதமர் வாஜ்பாய்**

கடவுள்மீதும், தலைவிதி மீதும் எனக்கு நம்பிக்கை உள்ளது என்று பிரதமர் வாஜ்பாய் தெரிவித்து உள்ளார்.

பிரதமர் வாஜ்பாய் இந்தியாடுடே என்ற இதழுக்கு பேட்டி அளித்து உள்ளார். அப்போது அவர் கூறுகையில் கடவுள் மற்றும் தலைவிதி மீது எனக்கு நம்பிக்கை உள்ளது என்று கூறினார்.

பிரதமர் வாஜ்பாய் சமீபத்தில் எழுதிய கவிதைகள் பற்றியும் அவர் கடைசியாக படித்த புத்தகம் சம்பந்தமாகவும் கேள்விகள் கேட்கப்பட்டது. அதற்கு பதில் அளித்த வாஜ்பாய், எனக்கு இயற்கையிலேயே கவிதை எழுதும் ஆர்வம் உள்ளது. இதை என்னை கவிதை எழுதும்படி தூண்டிவிட்டுக்கொண்டே இருக்கும் என்றார். நான் விருப்பப்பட்டு அரசியலுக்கு வரவில்லை. சூழ்நிலையின் காரணமாகவே அரசியலுக்கு வர வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது என்றார். கற்பனைவளத்துடன் காதல் கவிதைகளையும் நான் எழுதி உள்ளேன். ஆனால், அந்தமாதிரியான கவிதைகளை எழுதி பல ஆண்டுகளாகிவிட்டன. தற்போது கவிதை எழுதுவதற்கு நேரம் இல்லை. ஆனால், ஒரு சில கவிதைகளை மட்டும் படிக்கிறேன். கடைசியாக கிலாரி கிளிண்டன் எழுதிய 'லிவிங் கிஸ்டரி என்ற புத்தகத்தை படித்தேன் என்று வாஜ்பாய் கூறினார். எல்.கே. அத்வானி துணைப்பிரதமராக இருப்பதால், உங்களுக்கு உதவியாக இருக்கிறதா ? என்று நிருபர்கள் கேட்டதற்கு பதில் அளித்த வாஜ்பாய், எனக்கும் அவருக்கும் கடந்த 50 ஆண்டுகளாக நெருங்கிய தொடர்பு உள்ளது. அவர் மிகப் பெரிய சக்தியின் அவதாரமாக இருக்கிறார் என்றார். நோபல் பரிசு பெற விரும்பினீர்களா ? என்று கேட்டதற்கு உங்களுடைய கேள்வி உண்மையிலேயே என்னை சிரிப்புக்குள்ளாக்கி உள்ளது. என் வாழ்நாளில் எதையும் எதிர்பார்த்தோ அல்லது ஆசைப்பட்டோ நான் எதையும் செய்யவில்லை என்று வாஜ்பாய் பதில் அளித்தார்.

# தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு லண்டன் தொழிலதிபர் பாராட்டு!

சென்னை நகரை எழில் மிகு நகரமாக மாற்ற முயற்சி செய்து வரும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு லண்டன் வாழ் இந்திய தொழில் அதிபர் சுவராஜ்பால் நேரில் சந்தித்து பாராட்டு தெரிவித்தார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நேற்று லண்டனில் நிரந்தரமாகக் குடியேறிய இந்தியர். கல்கத்தாவைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் சுவராஜ்பால் கோட்டையில் சந்தித்தார். பிரிட்டனில் லார்டு பட்டம் பெற்ற இவர் லண்டனில் கள் பங்கு பெற வேண்டுமென்று முதல்வர் ஜெயலலிதா கேட்டுக்



ஒரு பிரபலமான இந்தியத் தொழிலதிபர் ஆவார். சென்னை நகரை எழில் மிகு நகரமாக மாற்றுவதற்கு தமி ழக முதல்வர் ஜெயலலிதா மேற்கொ ண்டு வரும் முயற்சிகளை இவர் பாராட்டினார். மேலும் பிரிட்டிஷ் வர்த்த கம் மற்றும் தமிழ்நாடு தொழில்கள் இடையில் பரிவர்த் தனைக்கான தமிழக முதல்வர் எடுக்கும் அனைத்து முயற்சிக ளுக்கும் தான் ஆதரவு கொடுப் பதாக முதல்வரி டம் கூறினார். தமிழக முதல்வரின் தலை மையில் தமிழ்நாட்டில் நடைபெறும் வளர்ச்சி திட்டங்களை தமிழகத் தின் முன்னேற்றத்தை தான் கண் கூடாகப் பார்த்து வருவதாகவும் அவர் முதல்வரிடம் கூறினார். தமிழ்நாட்டில் குறிப்பாக சென்னையில் அதிகரித்து வரும் சுற்றுலாத் தொழில் வாய்ப்பில் சுவராஜ்பால் போன்ற தொழிலதிபர் கொண்டார். முதல்வரின் இந்த யோசனைக்கு முழு ஆதரவு அளிப் பதாகலண்டன் தொழில திபர் சுவராஜ்பால் கூறினார். மேலும் சென்னையில் பேஷன் இண்டஸ்ட்ரீஸ் (நவநாகரீக ஆடை அலங்காரத் தொழில்) ஏற்படு த்தவும் தான் உறுதியுடன் இருப் பதாக முதல்வரிடம் கூறினார். மேலும் உலக அளவில் சென்னை யை பெரிய உற்பத்தி மையமாக ஆக்குவதற்கு முதல்வர் ஜெயலலிதா அரும்பாடுபடுகிறார். அதை நான் மனமார பாராட்டுகிறேன். இந்த விஷயத்தில் முதல்வர் மேற்கொள்ளும் எந்தவொரு புது முயற்சிகளுக்கும் தாம் முழு ஆதரவு தருவதாக லண்டன் தொழிலதிபர் கூறினார். இந்த சந்திப்பின்போது தலைமை செயலாளர் லட்சுமி பிராணேஷ், நிதித்துறை செயலாளர் நாராயணன் ஆகியோர் உடனிருந்தனர்

## உலகச் செய்திகள்

# அணு ஆயுதப் போர் நடைபெறும் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனமானது !

**பிரதமர் வாஜ்பாய் !**

அணு ஆயுதப் போர் நடைபெறும் என்று நினைப்பது பைத்தியக்காரத்தனமானது என்று பிரதமர் வாஜ்பாய் கூறி உள்ளார்.

பிரதமர் வாஜ்பாய் இந்தியாடுடே என்கிற சஞ்சிகைக்கு பேட்டி அளித்துள்ளார். அதில் நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு பிரதமர் வாஜ்பாய் அளித்துள்ள பதிலும் பின்வருமாறு:

கேள்வி: அணு ஆயுதப் போரை துவக்கி வைப்பதற்கான பொத்தானை பிரதமர் வாஜ்பாய் அமுக்கும் சாத்தியம் உள்ளதா ?

வாஜ்பாய்: மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தின் பொத்தானை மட்டுமே நான் அமுக்குவேன். அணு ஆயுதப் போர் மூளும் என்று நினைப்பது பைத்தியக்கார த்தனமானது. எங்களது அணு ஆயுதங்கள் தற்காப்புக்கானது தான்.

கேள்வி: கடந்த 1998-ம் ஆண்டில் பொக்ரானில் அணு குண்டு சோதனை நடத்தியது



சரியா ? வாஜ்பாய்: அணு குண்டு சோதனை நடத்த அரசு முடிவு செய்தது சரிதான். இது நிச்சயமாக சரியான முடிவு ஆகும். பல் வேறு நாடுகள் இதை வெளிப்படையாக ஏற்க மறுத்தாலும் அணு குண்டு சோதனை நடத்தியதை இன்றைய தினம் அந்த நாடுகள் அங்கீகரிக்கின்றன. அணு குண்டு சோதனைகள் எங்களது தேசிய பாதுகாப்பை பலப்படுத்தி உள்ளது.

# காந்திஜி கொலை செய்யப்பட்டது எப்படி?

—காந்திஜியை சுட்டுக் கொன்ற நதுராம் கோட்சே தூக்கிலிடப்பட்டார். அவரது சகோதரர் கோபால் கோட்சே சிறையிலிருந்து வெளிவந்து சுதந்திரப்பறவையாக இருக்கிறார். இப்போதும் அவர் காந்திஜியை சுட்டுக் கொன்றதில் தப்பில்லை என்றே சொல்லி வருகின்றார். காந்திஜி சுடப்படுவதற்கு பத்துத் தினங்களுக்கு முன்னர் அவரைக்கொலை செய்ய ஒரு முயற்சி நடந்தது. இம் முயற்சியில் ஈடுபட்டவரே கோபால் கோட்சே. காந்திஜி எப்படி சுடப்பட்டார் என்பதை அவரே சொல்கின்றார்.

1948ம் ஆண்டு ஜனவரி 30ம் திகதி சரியாக மாலை ஐந்து மணி அடுத்த ஐந்து நிமிடங்களில் காந்திஜி கொலை செய்யப்பட விருந்தார். பிர்லா தோட்டத்தில் காந்திஜி தங்கியிருந்தார். அவரைக் கொல்வதற்காக அந்த பிரார்த்தனை கூட்டத்துக்கு நதுராம் கோட்சே, நாராயண் ஆப் தே, விஷ்ணுகாகரே ஆகியோர் நுழைந்திருந்தனர். நதுராமிடம் இத்தாலியில் தயாரிக்கப்பட்ட நவீன துப்பாக்கி ஏழு குண்டுகளுடன் காந் திஜியின் வருகைக்காக காத்திருந்தது. அப்போது தன் அறையிலிருந்து கிளம்பி காந்திஜி பிரார்த்தனைக் கூட்டத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார். அவர் அப்போது சுகவீன மடைந்திருந்தார். நடந்து வந்த அவர் சுகவீனம் தள்ளாமை காரணமாக இடது பக்கம் வந்து கொண்டிருந்த பெண்ணன் மீது சாய்ந்திருந்த தால் அவரது இடது பக்கம் அப் பெண்ணனால் முழுமையாக மறைக்கப்பட்டிருந்தது.

இப்போது கோட்சேவுக்கு ஒரு பிரச்சனை அந்த நிலையில் சுட்டால் குண்டு பெண்ணின் மீது பாயும் எனவே மணி ஐந்து ஐந்தாகையில் கோட்சே அப் பெண்ணைப் பிடித்து கீழே தள்ளினார். அப் பெண் விலகிக் கொண்டிருந்ததும் ஒரு அடி முன்னெடுத்து வைத்த கோட்சே, ஒரு அடி இடைவெளியில் மூன்று முறை சுட்டான். இரண்டு குண்டுகள் காந்தியைத் துளைத்து வெளியேற மூன்றாவது குண்டு இதயத்தைத் துளைத்தது இதற்குள் தள்ளி நின்ற ஆப்தேயும், கர்கரேயும் கோட்சேவுக்கு அருகில் வந்து விட்டார்கள் காந்திஜி ஹேராம என்று சொல்லாமேலேயே மண்ணில் சரிந்தார். கோட்சே தனது வலது கையை உயர்த்தி துப்பாக்கியோடு பொலிசை அழைத்தான். பொலிசார் மூவரையும் அழைத்துச் சென்றனர். இப்படி இந்திய சுதந்திர வரலாற்றில் மிக முக்கிய சம்பவத்தை வர்ணிக்கும் கோபால் கோட்சே காந்திஜியை தான் சுட முயன்றது பற்றியும் இப்படி விவரிக்கிறார்.

சாகோதராம்தான் காந்திஜியைக் கொலை செய்யும் முடிவோடு டில்லிக்கு வந்தார். டெல்லிக்கு வந்த அவர் ஹொட்டல் மரினாவில் அறை எடுத்துத் தங்கினார். இதே அறையில் நான் நதுராம் கோட்சே, நாராயணஆப்தே மதன்லால் படவா மற்றும் இன்னும் இருவர் என எழுவர் காந்திஜியைக் கொலை செய்யும் திட்டத்துடன் தங்கியிருந்தோம். கொலை செய்யப்படுவதற்கு பத்துத் தினங்களுக்கு முன்னர் அவரைக் கொலை செய்யும் பொறுப்பை நானும் மதன்லால் பட்வாவும் ஏற்றக் கொண்டோம். அன்று அவர் சொற்பொழிவு நடத்தும் பிர்லாமந்திரை அடைந்தோம். காந்திஜி அமரும் இடத்திற்கு பின்புறம் ஒரு பணியாளர் அறை இருந்தது. அந்த அறையின் ஜன்னலில் இருந்து காந்திஜியை நான் குறிவைத்துச் சுடுவதர்க ஏற்பாடு. நான் சுட்டதுமே சுடப்பட்ட விஷயத்தைத் திசை திருப்ப பிர்லா இல்லத்திலிருந்து 150 அடி தூரத்தில் இருந்து மதன்லால் பட்வா குண்டு வெடிக்கச் செய்ய வேண்டும். இந்த இரண்டுமே குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிக்கப்பட வேண்டும். நான் எனக்கு வரையறுக்கப்பட்ட நேரப்படி அந்த அறைக்குள் நுழைந்தேன். ஜன்னல் அருகே கயிற்றுக் கட்டில் இருந்தது. அதன் மீது ஏறி காந்திஜயைக் குறிபார்க்கத் தொடங்கினேன். 'அவரைச் சுடவேண்டிய நேரம் வந்ததும் துப்பாக்கியின் குதிரையை அழுத்தப்போகும் சமயத்தில் கயிற்றுக்



கட்டில் அறுந்தது. நான் கீழே விழுந்து விட்டேன். எனவே நான் அவரைச் சுடவேண்டிய நேரம் கடந்து விட்டது நான் சுதாகரித்து மீண்டும் சுட முயற்சி செய்யும் போது தனது நேரம் வந்து விட்டதால் எனக்கு என்ன நடந்தது என அறியாமலேயே ஆப்தேகுண்டுகளை வெடிக்கச் செய்தான். இது சம்பவத்தை திசை திருப்பவதற்கு பதிலாக அவனைக் காட்டிக் கொடுத்து விட்டது. அப்தே பொலிசாரிடம் சிக்கின்றான்.

நான் அங்கிருந்து தப்பி பூனா சென்று விட்டேன் ஹோட்டல் அறை எண்43ல் தங்கியிருந்த நதுராம் கோட்சேயும், நாராயண ஆப்தேயும் அங்கிருந்து விரைவாகக் கிளம்பி கான் பூரைச் சென்றடைந்தனர். ஆப்தேயிடமிருந்து விஷயத்தைக் கறந்த பொலிசார் நதுராம் கோட்சே பற்றித் தெரிந்து கொண்டு ரயில்களைச் சோதனை போடத் தொடங்கினர் ஆனால் அவர்கள் அச்சமயத்தில் டில்லியைத் தாண்டியிருந்தார்கள். இந்தியா பிரிந்து பாகிஸ்தான் என்ற நாடு உருவாவதற்கு காந்திஜி காரணமாக இருந்தார் என்பதே தீவிர இந்துத்துவவாதிகளான இவர்கள் காந்திஜியைக் கொலை செய்வதற்கான பிரதான காரணம். காந்திஜி முஸ்லிம் களுக்கு பரிந்து பேசுகிறார் என்று இவர்கள் கருதினர்.

பாகிஸ்தானுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென அவர் கூறியது இந்த தீவிரவாத இளைஞர்களை கொந்தழிப் புள்ளாக்கி யதில் வியப்பில்லை. ஆனால் அவர்கள் தான் காந்திஜியை இவ்வாறு நினைத்தார்கள் என்றால் இன்னும் காந்திஜியின் அரசியல் கொள்கைகளைப் பலர் விமர்சணம் செய்யவே செய்கிறார்கள்.

## பெண்ணாக மாறினார்

ஐரோப்பவைச் சென்ற நூற்றாண்டில் ஆட்டிப்படைத்த நெப்போலியன் 1814ம் ஆண்டு நடைபெற்ற போரில் தோல்வியடைந்தான். எதிரிகளிடம் சரணடையாமல் தன் உயிரைப்போக்கிக் கொள்ள விரும்பிய அவன் எப்போதும் தன்னிடம் தயாராக வைத்திருந்த விஷத்தை அருந்தி விட்டான். ஆனால் அவன் உயிர் போகவில்லை.

பலவருடங்களாக குப்பியில் அவன் வைத்துக் கொண்ட விஷத்தின் வீரியம் குன்றி விட்டதே அதற்குக் காரணம் வாந்தி எடுத்து விஷம் வெளிப்பட்டு விட்டது. அப்போது அவன் இறந்திருந்தால் அந்த ஆண்டு வாட்டர்லுபோர் நடைபெற்றிருக்காது. அதிலும் தோல்வி கண்டு ஹெலினாதீவில் சிறைவைக்கப்பட்டு 1821ல் தான் இறந்தான் அவன் எப்படி இறந்தான் என்பது குறித்துப் பலவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன.

தெற்கு அட்லாண்டிக் கடலில் இருந்த செயின்ட் ஹெலினா என்ற தீவில் தன் கடைசி ஆறு ஆண்டுகளை நெப்போலியன் கழித்தான். 52வயதில் இறந்த போது பெரிதும் நோய் வாய்ப்பட்ட மனிதனாக இருந்தான். எதனால் இறந்தான் என்பது இன்று வரை மர்மமாகவே உள்ளது. கான்சர் நோயினால் இறந்ததாகச் சிலரும், உறவினரால் விஷமிட்டுக் கொல்லப் பட்டதாகச் சிலரும் கூறுகின்றனர். சிறையிருந்த கட்டிடத்தின் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்த பேப்பர் ஆர் செனிக் விஷம் அடங்கியது. இதன் காற்றுப் பட்டு இறப்பு நேர்ந்தது என்பதும் ஒரு கருத்து.

டாக்டர் கிரின் பிளாட் என்ற அமெரிக்க நிபுணர் 1982ல் வியப்பூட்டும் ஒரு புதிய விவரத்தை வெளியிட்டார். கடைசிக் காலத்தில் அவர் பெண்ணாக மாறிக் கொண்டிருந்தார். என்பதே அது. உடல் ஹார்மோன்களில் ஏற்படும் கோளா றால் இவ்வாறு நேர்கிறது. நெப் போலியன் இறந்த பிறகு அவரது உடலைப் பரிசோதித்த டாக்டர் ஒருவர் இவ்வாறு கூறுயிருக்கிறார். அவரது உடலில் பெண்மை அதிகரித்திருந்தது. மார்பகங்கள் உருண்டு திரண்டிருந்தன. சருமம் பெண்களுடையதைப் போல் மிருதுவாகியிருந்தது. உடலில் ரோமங்களே இல்லை. முதல் மனைவி ஜோஸப்பி னிடம் தீராக்காதல் கொண்டிருந்த நெப்போலியன் 1810ல் இரண்டாவது மனைவி மேரிலூயியை மணந்து கொண்டபோது அவளிடம் நெப்போலியனுக்கு ஈடுபாடு இருக்கவில்லை. என்பதையும் டாக்டர் கிரின் பிளாட் சுட்டிக் காட்டி, ஆண்மை குறைந்து விட்டதே இதற்குக் காரணம் என்கிறார்.




# தோமஸ் அல்வா எடிசனும் அவரது கண்டு பிடிப்புகளும்

அமெரிக்க கண்டுபிடிப்பா ளரான தோமஸ் அல்வா எடிசன் அமெரிக்காவில் உள்ள ஓஹியோ என்னும் கிராமத்தில் 1847ம் ஆண்டு பிறந்தார். அவரது 7வது வயதில் அவர் தன் பொற்றோர்களுடன் அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் நகருக்கு இடம் பெயர்ந்தார். எடிசன் தனது ஆரம்பக் கல்வியை போட கியுரோன் என்னுமிடத்திலுள்ள பாடசாலையில் ஆரம்பித்தார். ஆனா ல் அவர் தனது காது கேட்காத கோளாறு காரணமாக படிப்பில் கவனம் செலுத்தவில்லை. ஆதலால் அவரது ஆசிரியர்களும் அவரை ஒதுக்கித் தள்ள விரும்பினர். அவரும் பாடசாலைக்குச் செல்வதை நாள டைவில் குறைத்துக் கொண்டார். ஆனால் எடிசன் தனது 10ஆவது வயதில் சரளமாக வாசிக்கக் கற்றுக் கொண்டார். அத்துடன் தனது வீட்டில் ஒரு சிறிய ஆய்வு கூடத்தையும் ஸ்தாபித்தார். ஆய்வு கூடத்திலிருந்து எழும் துர்நாற்றத்தைச் சகிக்க முடியாமல் தாய் தத்தளித்துக் கொண்டிருக்கும் வேளையில் இவர் "கிராண்ட் ட்ரஸ்க்" புகையிரத நிலையத்தில் புகையிரத சுத்திகரிப்புப் பையனாக வேலைக்குச் சேர்ந்தார். அதேநேரம் அநாதரவாகக் கிடந்த ஒரு வெற்றுக் காரில் தனது புதிய ஆய்வு கூடத்தைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது12. எடிசன் புகையிரத வேலை செய்து கொண்டிருக்கும் போது அவரது மனதில் ஏதோ ஒரு விபரீத உணர்வு ஏற்பட்டது. அவ்வுணர்வு அவரது தொழிலையே பின்னாளில் மாற்றியமைத்தது. ஒரு சமயம் புகையிரதம் வந்து கொண்டிருக்கும் போது பாதையில் விழுந்த புகையிரத நிலைய அதிகாரியின் குழந் தையின் உயிரை எடிசன் காப்பாற்றினார். அவரது புத்திசாலித்தன த்தைக் கண்ணுற்ற அவ்வதிகாரி எடிசனுக்கு அப்போதைய தொலைத் தொடர்பு சாதனத்தை எவ்வாறு இயக்குவதென்பதைக் கற்பித்தார். 1862 தொடக்கம் 1868ஆம் ஆண்டு வரை எடிசன் பல மாநிலங்களில் தந்திச் சேவகராக கடமையாற்றினார். இக்காலப்பகுதியில் தானி யங்கித் தந்திச் சேவையை செயல்படுத்துவதற்கான கருவியைக் கண்டு பிடித்தார். அதே நேரம் அவர் சமிக்ஜைகளை பதிவு செய்யும் கருவியொன்றையும் கண்டு பிடித்தார். இது 1868ல் இடம் பெற்றது. இதுவே எடிசனின் முதலாவது கண்டுபிடிப்பாகும். 1869ல் எடிசன் ஒலிப்பதிவுக் கருவியைக் கண்டு பிடித்தார். இக்கருவி மிகவும் உப யோகமுள்ளதாகும். இதே ஆண்டு தந்தியடிக்கும் சாதனத்தையும் கண் டு பிடித்தார்.

1878ல் எடிசன் மின்சாரத் தில் எரியக் கூடிய மின்குமிழைக் கண்டு பிடிப்பதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்தினார். அக்காலத்தில் ஆர்க்லாம்ப் (ARC LAMP) என்னும் ஒளியமைப்பு வழக்கத்தில் இருந்தது. இது இரண்டு கார்பன் நுனிகளுக்கிடை யில் மின்சாரத்தைப் பாய்ச்சுவதன் மூலம் ஒளியை உண்டாக்கச் செய்வதாகும். இவ்விதமான வெளிச்சத்தை ஐரோப்பின் வீதிகளில் உபயோகத்தில் விடப்பட்டது. இதன் ஒளிமிகவும் பிரகாசமாக விருந்ததால் வீடுகளில் பாவனைக்கு உகந்ததாகக் கருதப்படவில்லை. ஆகவேதான் எடிசன் மின்குமிழைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டார். எடிசனும் அவரது உதவியாளர்களும் கடுங்குளிரையும் பாராது செம்பு, நாகம் மற்றும் பிற உலோகங்களையும் கொண்டு மின்குமிழ் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்கள் 1500க்கும் அதிகமான வெவ்வேறு உலோகங்களை மின்குமிழுக்கள் வைத்து பரிசோதித்தனர். ஆயினும் எடிசன் தனது முயற்சியில் தோல்வியையே சந்தித்தார். பல தோல்விகள் எவரை யும் அம்முயற்சியிலிருந்து விலகவே வழிகோலும். ஆனால் எடிசனுக்கு இருமுக்கிய குணாம்சங்கள் இருந்தன. பொறுமையும் விடமுயற்சியுமே அவரது செயற்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல துணைபுரிந்தன. இறுதியில் கார்பன் முலாமிட்ட கார்ட் போட் கீற்றுக்களை மின்குமிழின் இழைகளாக உபயோகித்தார். இவை நீண்ட காலம் பாவிக்கக் கூடியவைகளாகவிருந்தன.

மக்களிடம் இருந்து இம் மாதிரியான மின்குமிழ்களுக்கு அக் காலத்தில் மிகுந்த வரவேற்பு இரு ந்தது. தற்போது எம்மத்தியில் பல விதமான வடிவமைப்புக்களில் மின்குமிழ்கள் பாவனையிலுள்ளன. இவையாவற்றிற்கும் மூலகர்த்தா தோமஸ் அல்வா எடிசனேயாகும்.

இவர் நியுயோர்க் நகரு க்கு இடம் பெயர்ந்து ஒரு வருடத்திற்குள் நியுஜேர்சி என்னும் இடத்தில் ஒரு தொழிற்சாலையை நிறுவினார். அத்தொழிற்சாலையில் பலவிதமான தொலைத் தந்திச் சேவை சாதனங்களையும், சர்வதேச ரெலிகிறாப் பிறி ண்டிங் சாதனங்களையும் உற்பத்தி செய்தார்.

எடிசன் பொருளாதார ரீதியில் பலவீன மடைந்திருந்ததால், 1875ம் ஆண்டளவில் அவருக்கு பெரும் பணமுடை ஏற்பட்டது. செலவுகளைக் குறைப்பதற்காக எடிசன் ஒரு புதிய ஆய்வு கூடத்தையும் ஒரு இயந்திர சாதன தொழிற்சாலையையும் நிறுவுவதற்குத் தனது தந்தையின் உதவியை நாடினார். 1876ல் எடிசன் தனது இரு சகாக்களான சார்ஸ் ஸ்பர்ச் கெலர், ஜோன் குருசி ஆகியோரு டன் தனது புதிய தொழிற்சாலைக்கு குடிபுகுந்தார்.

1877ல் எடிசன் கார்பன் இணைப்புக்களாலான தகவல் பரிவர்த்தனைச் சாதனத்தைக் கண்டு பிடித்தார். அது தற்போதும் தொலைபேசிகளின் ஒலிபெருக்கிகளிலும் ஒலிவாங்கிகளிலும் பாவனையிலுள்ளது. 1879ம் ஆண்டின் பிற்பகுதியில் சில முதலீட்டாளர்களின் அனுசரணையுடன் எடிசன், எடிசன் லைற் கொம்பனி என்னும் ஸ்தாபனத்தை நிறவினார். 1883ல் எடிசனின் பொறியியலாளர்களில் ஒருவரான வில்லியம் ஹம்மர் என்பவரின் உதவியுடன் மின்னணுக்குமிழை உருவாக்கினார். இக்கண்டு பிடிப்பே எடிசன் விளைவு (EDISON EFFECT) என அழைக்கப்படுகிறது. 1884ல் வெஸ்ற் ஒறேஜ் என்னுமிடத்தில் எடிசன் ஒரு புதிய ஆய்வு கூடத்தை நிறுவினார். அங் கு அவர் வர்த்தக ரீதியில் கிராம போன், எடிசன் மின்கலங்கள், மின்சாரப் பேனாக்கள் போன்ற இன்னும் பல மின்சார உபகரணங்களை உற்பத்தி செய்தார். 1913ல் முதலாவது பேசும்படத்தை எடிசன் அறிமுகப்படுத்தினார். சுமார் 1000க்கும் அதிகமான கண்டு பிடிப்புக்களை எடிசன் உலகிற்கு வழங்கியுள்ளார். இவர் 1931ம் ஆண்ட ஒக்டோபர் மாதம் 18ந் திகதி நியுஜேர்சியிலுள்ள வெஸ்ட் ஒறேஜ் என்னுமிடத்தில் காலமானார்.

# விடைபெற்றுச் சென்ற 2003ன் விளையாட்டுத்துறை நிகழ்வுகள்

*–நேற்றைய தொடர்ச்சி....*

ஜூன் 1:
மே.இ.தீவுகளில் அந்த அணிக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் தொடரை 4-3 என்ற கணக்கில் பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலியா. அணி கைப்பற்றியது.

ஜூன் 7:
பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் மகளிர் ஒற்றையர் பட்டத்தை பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் வென்றார்.

ஜூன் 8:
பிரெஞ்ச் ஓபன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை ஸ்பெயின் வீரர் ஜுவான் கார்லோஸ் பெரைரோ தட்டிச் சென்றார்.

ஜூன் 26:
உயிரைக் கொடுத்தாவது இந்தப் போட்டியில் வெல்ல வேண்டும் என்று சகவீரர்களிடம் சூளுரைத்துவிட்டு கன்பெடரேஷன் கால்பந்து அரையிறுதியில் ஆடிய கேமரூன் கால்ப்பந்து அணியின் வீரர் மார்க் விவீயன் ஃபோ, அப்போட்டியில் ஆடிக் கொண்டிருக்கும் போதே மாரடைப்பு ஏற்பட்டு இறந்து விட்டார். அப்போட்டியில் கேமரூன் அணி வென்று, முதல் முதலாக கன்பெடரேஷன் கோப்பை இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

ஜூன் 29:
ஜெர்மனியில் நடைபெற்ற ஹாம்பர்க் மாஸ்டர்ஸ் சாம்பியன்ஷிப் ஹாக்கி போட்டியில் இந்திய ஹாக்கி அணி வெற்றி பெற்றது.
கன்பெடரேஷன் கால்பந்து இறுதிப் போட்டியில் பிரான்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் கேமரூன் அணியை வென்றது.

ஜூலை 2:
இங்கிலாந்தின் பிரபல கால்பந்து வீரர் டேவிட் பெக்காம், மான்செஸ்டர் யுனைடெட் கிளப்பிலிருந்து விலகி ரியல் மாட்ரிட் கிளப்பில் இணைந்து கொண்டார்.

ஜூலை 5:
அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் விம்பிள்டன் மகளிர் ஒற்றையர் பட்டம் வென்றார். விம்பிள்டனில் சிறுமிகளுக்கான இரட்டையர் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சாவும், ரஷ்யாவின் க்ளேபளோவாவும் பட்டம் வென்றனர்.

ஜூலை 6:
ஸ்விட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஆடவர் ஒற்றையர் பட்டம் வென்று, விம்பிள்டனில் புதிய சாதனை புடைத்தார். விம்பிள்டன் கலப்பு இரட்டையர் பட்டத்தை லியாண்டர் பயஸ் மாட்டினா நவரத்திலோவா ஜோடி வென்றது.

ஆகஸ்ட் 2:
எடின்பர்க்கில் நடைபெற்ற பிரிட்டிஷ் செஸ் சாம்பியன்ஷிப் பட்டத்தை இந்திய வீரர் அபிஜித் குண்டே வென்றார்.

ஆகஸ்ட் 5:
இங்கிலாந்தின் வேகப் பந்து வீச்சாளர் டேரன் காஃப் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஆகஸ்ட் 23:
உலக தடகள சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்கு இந்திய வீராங்கனை நீலம் ஜே.சிங் தகுதி பெற்று புதிய சாதனை படைத்தார்.

ஆகஸ்ட் 24:
ஆம்ஸ்டர்டாமில் நடைபெற்ற சாம்பியன் டிராபி ஹாக்கி, இறுதிப் போட்டியில் ஹாலந்து வென்றது.

ஆகஸ்ட் 25:
டென்னிஸ் விளையாட்டில் சகாப்தம் படைத்த அமெரிக்காவின் பீட் சாம்ப்ராஸ், யுஎஸ். ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டியின் துவக்க நாளன்று சென்டர் கோர்ட்டில் ஏராளமான ரசிகர்களுக்கு மத்தியில் தனது ஓய்வை அறிவித்தார்.




ஆகஸ்ட் 30:
பாரீசில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை அஞ்சுபாபிஜார்ஜ், வெண்கலம் வென்றார்.

செப்டம்பர் 6:
யு.எஸ். ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் மகளிர் ஒற்றையர் பட்டத்தை பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் தட்டிச் சென்றார். யு.எஸ்.ஓபன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை அமெரிக்க வீரர் ஆண்டிரோடிக் வென்றார்.

செப்டம்பர் 21:
இரானி கோப்பை கிரிக்கெட் சென்னையில் நடைபெற்றது.
இறுதியில் ரெஸ்ட் ஆஃப் இந்தியஅணி வெற்றி.

செப்டம்பர் 28:
கோலாலம்பூரில் நடைபெற்ற ஆசிய கோப்பை ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தி இந்தியா தங்கம் வென்றது.

அக்டோபர் 10:
டெஸ்ட் போட்டிகளில் ஒரு இன்னிங்சில் அதிக ஓட்டங்கள் எடுத்து அவுஸ்திரேலியா வீரர் மேத்யூ ஹெய்டன் உலகசாதனை படைத்தார். 375 ஓட்டங்கள் எடுத்து 10 ஆண்டுகளாக அந்த சாதனையைத் தன் வசம் வைத்திருந்த பிரைன் லாராவை, 380 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் ஹெய்டன் பின்னுக்குத் தள்ளினார்.

அக்டோபர் 12:
கலிபோர்னியாவில் நடைபெற்ற பெண்களுக்கான உலகக் கோப்பை கால்பந்து போட்டியில் ஜெர்மன் மகளிர் அணி பட்டம் வென்றது.

அக்டோபர் 25:
சீனாவில் நடைபெற்ற ஐ.பி.எஸ்.எஃப் ஆடவர்க்கான உலகக்கோப்பை ஸ்னூக்கர் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி வெற்றி பெற்று புதிய சாதனை படைத்தார்.

அக்டோபர் 30:
ஹைதராபாத்தில் நடைபெற்ற ஆஃப்ரோ-ஆசியன் விளையாட்டுப் போட்டிகளில் இந்திய ஹாக்கி அணி, பாகிஸ்தான் அணியை வீழ்த்தி தங்கம் வென்றது.

நவம்பர் 6:
லாகூரில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.

நவம்பர் 18:
இந்தியாவில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணியை வென்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி கோப்பையைத் தட்டிச் சென்றது.

நவம்பர் 23:
பெடரேஷன் மகளிர் டென்னிஸ் கோப்பையை பிரான்ஸ் மகளிர் அணி கைப்பற்றியது.

நவம்பர் 30:
டேவிஸ் கோப்பை டென்னிஸ்- இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி.

டிசம்பர் 7:
நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் தொடரை 5-0 என்ற சொந்த மண்ணில் பெற்றது பாகிஸ்தான் கிரிக்கெட் அணி.

டிசம்பர் 16:
22 ஆண்டுகளுக்குப் பிறகு அவுஸ்திரேலியாவில் அந்த அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்தியஅணி வெற்றி, அடிலெய்டில் நடைபெற்ற இப்போட்டியில் இரட்டை சதமடித்தார் இந்திய அணியின் துணைத் தலைவர் ராகுல் டிராவிட். இந்த ஆண்டுக்கான சிறந்த கால்பந்து வீரர் என்ற பிஃபா விருது, பிரான்சின் ஹின டின் ஹிடேனுக்குக் கிட்டியது.

டிசம்பர் 21:
இந்தியாவின் மூத்த டெஸ்ட் வீரர் எம்.ஜே.கோபாலன் சென்னையில் காலமானார். இவர் இந்திய ஹாக்கி அணியிலும் இடம் பெற்று ஆடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




## புன்னைச்சோலை ஆலய வீதி அகலமாக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு நகரிலே பிரசித்தி பெற்று விளங்கி அடியார்களுக்கெல்லாம் அருள் பாலித்து கேட்கும் வரங்களை அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் புன்னைச்சோலை காளியம்மன் ஆலயத்திற்கு பல பிரதேசங்களிலிருந்து மக்கள் கூட்டங்கூட்டமாக வந்து சொரிகின்றனர். திருவிழாக் காலத்தில் மக்கள் வருவது போன்று பூசை வேளையில் பல ஆயிரக் கணக்கான மக்கள் வருகை தருகின்றனர். அது மாத்திரமின்றி வெள்ளி, செவ்வாய் ஆகிய கிழமை நாட்களிலும் நியாயமான மக்கள் வருகின்றனர். இவ்வாறாக கூடுதலாக வருகை தந்து அம்மனது அருளைப் பெற்றுச் செல்லும் இவ்வாலயத்தின் முன்வாயில் வீதியானது மிகவும் ஒடுக்கமானதாகக் காணப்படுவது வேதனைக்குரிய விடயமாகும்.

பல வாகனங்களில் மக்கள் இவ்வாலயத்திற்கு வருகின்றனர். அத்தோடு ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் பஸ் வண்டிகளும் வருகின்றது. அவ்வாறு பஸ் வண்டிகள் வந்து தரித்து நிற்பதற்குரிய வசதிகள் இருந்தும் பஸ் செல்வதற்கு வீதி போதாமல் உள்ளது. ஒரு பஸ் அவ்வீதியால் செல்லுமானால் பஸ் செல்லும் வரைக்கும் மற்றைய வாகனங்களும், பாதசாரிகளும் ஒரு பக்கமாக நின்று பஸ் சென்ற பின்பு தான் செல்லலாம். அத்தோடு வேன்கள், முச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள் என்பனவும் அதிகமாக வருகின்றமையினால் விபத்துக்கள் உண்டாகும் நிலையும் காணப்படுகின்றது.

எனவே அவ்வீதியினை அகட்டி புனரமைப்புச் செய்தால் ஆலயத்திற்கு வரும் மக்கள் சிரமப்படாது பிரயாணத்தை மேற் கொள்வார்கள். அத்தோடு கோயிலும் சிறப்புற்று விளங்கும்.

வீதி புனரமைப்பு அதிகாரிகளே! நீங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதற்காக அலையின் தேடலினூடாகத் தெரிவுபடு த்துகிறேன்.

*எஸ். சிவ ரமணன்*

## கொக்கட்டிச்சோலை பொதுச்சந்தையின் அவல நிலை

கொக்கட்டிச்சோலையில் பொதுச் சந்தை இருந்தும் இல்லாத நிலையில் தென்படுகின்றது. இச்சந்தையில் எவ்வளவு இடவசதிகள் இருந்தும் அதனைப் பிரயோகிப்பதற்கு எவரும் முன்வருவதில்லை. இருபத்தைந்து முப்பது கடைகள் அமைத்து வியாபாரம் செய்யும் இடத்தில் மூன்று கடைகளை கொக்கட்டிச்சோலை மக்களே தான் வைத்திருக்கின்றார்கள்.

ஏன்? பட்டிப்பளைப் பிரதேசத்திற்குட்பட்ட கொக்கட்டிச் சோலை கிராமத்து மக்களைத் தவிர ஏனைய கிராமத்து மக்கள் கடை வைத்தால், வைக்கவேண்டாம் என்றா சொல்லப் போகிறார்கள்? மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தால் தான் இந்தச் சந்தையினைப் பெருக்க முடியும்.

படுவான்கரைப் பிரதேசத்திலிருந்து மக்கள் நாளுக்கு நாள் களுவாஞ்சிக்குடி மற்றும் காத்தான்குடிகளுக்குச் சென்று மரக்கறிகளை வாங்கிக் கொண்டு வருவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம்.

எமது பிரதேசத்தில் சந்தை இருந்தும் இல்லாத நிலையினைப் பார்க்கும் போது பெருங் கவலையைத் தருகின்றது.

எனவே அயல் ஊருக்குச் சென்று மரக்கறிகளை விற்பனை செய்யும் வியாபாரிகளாவது இந்தச் சந்தியில் மரக்கறிகளைக் கொண்டு வந்து விற்பனை செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

*ச. கல்பனா, கொக்கட்டிச்சோலை*

## எப்போது வீதி விளக்குகள்

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியினூடாக ஏறாவூர் தொடக்கம் பிள்ளையாரடி வரையும் இரவு நேரங்களில் இருட்டாகக் காட்சியளிக்கின்றது. இப்பாதையில் தெரு விளக்குகள் போடாதது ஏன்? கடந்த யுத்த காலத்தில் தான் வீதி விளக்குகள் போடப்படாமை பாதுகாப்புக் காரணங்கள் என கூறப்பட்டது. ஆனால் யுத்தம் ஓய்ந்த வேளையில் இரவு முழுவதும் இவ்வீதியால் மக்கள் பிரயாணம் மேற்கொள்வதால் வெளிச்சமில்லாமல் பெருஞ்சிரமப்படுகின்றனர். ஆகவே உடனடியாக வீதி விளக்குகள் போட உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றோம். *இரா. உதயகுமார் மட்டக்களப்பு.*

*அன்புடன் வாசகர்களுக்கு!*

*எமது தாயக மண்ணில் அன்றாடம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உங்கள் பகுதிகளில் செய்ய வேண்டிய அபிவிரு த்திகள், புறக்கணிப்புகள், அதிகாரிகளின் ஊழல்கள், மோசடிகள், இன்னும் எத்தனையோ சம்பவங்களை மனதிற்குள் பூ ட்டி வைக்க வேண்டாம்.*

*தமிழ் அலையில் வெளிக்கொணருங்கள். தமிழ் அலையில் ''அலையின் தேடல்'' பகுதி உங்கள் ஆக்கங்களை பிரசுரிப்பதற் காகக் காத்திருக்கின்றது. அதன் வாயிலாக வெளிவருவதால் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.*

*எனவே உங்கள் பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.*

அனுப்ப வேண்டிய முகவரி
அலையின் தேடல்,
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.

தமிழ் அலை
Tamilalai
தினசரி


# நாடாளுமன்ற தேர்தல் நடந்தால் புலிகளுக்கு சாதகமாக அமையும்

## பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பி.

(நமது நிருபர்)

தற்போதைய சூழ்நிலையில் பொதுத்தேர்தல் நடாத்தப்படுமானால் அது விடுதலைப் புலிகளுக்கே சாதகமாக அமையும் என பொது ஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் சந்தன கத்ரியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பு தொலைக்காட்சி ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலொன்றின் போதே அவர் இவ்வாறு தனது கருத்தை வெளியிட்டுள்ளார். தேர்தல் ஒன்றை நடாத்துவதற்கான சூழல் தற்போது தோன்றவில்லை எனக் குறிப்பிட்ட அவர், தற்போதைய நிலையில் தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும் என்பதை விடுதலைப் புலிகளே விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். வடகிழக்கில் எட்டு மாவட்டங்களில் ஐந்து மாவட்டங்கள் விடுதலைப் புலிகளின் நூறு வீத கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில், பொதுத் தேர்தல் ஒன்று நடாத்தப்பட்டால், அது விடுதலைப் புலிகளுக்குச் சாதகமானவர்களுக்கே நன்மையை ஏற்படுத்தும் என்றும் சந்தன கத்ரியாராச்சி மேலும் குறிப்பிட்டுள்ளார். பொதுத்தேர்தல் ஒன்று நடாத்தப்படுமானால் வடக்கு, கிழக்கு, மலையகம் என தமிழர்கள் பெருமளவு ஆசனங்களைப் பெறும் வாய்ப்புக்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கணித்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.




# தொழிற்பயிற்சி நிலைய இறுதிப்பரீட்சை இன்று

(ஏறாவூர் நிருபர்)

மூன்றாம் நிலைக்கல்வி பயிற்சி அமைச்சின் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் நாட்டின் சகல மாவட்டங்களிலும் இயங்கும் கிராமிய தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒரு வருடம் மற்றும் ஆறு மாத கால பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான இறுதிப்பரீட்சை இன்று சனிக்கிழமை நடைபெறுகிறது.

இப்பரீட்சைகளில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 900 பேர் தோற்றுகின்றன்ர். மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைக்கப்படும் நிலையத்தில் தமிழ் மொழி மூலம் 250 பரீட்சார்த்திகளும் அம்பாறை மாவட்டத்தில் அமைக்கப்படும் 3 நிலையங்களில் 650 பரீட்சார்த்திகளும் பரீட்சைக்கு தோற்றுவதாக அதிகார சபையின் பிராந்திய உதவிப்பணிப்பாளர் எம். எம். அமீர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியிலும் அம்பாறை-நிந்தவூர் அல்-சீறா தேசிய பாடசாலையிலும் கான் திஸ்ஸ மாகாவித்தியாலயம மற்றும் கெப்பிட்டிப் பொல பாடசாலையிலும் பரீட்சை நிலையங்கள் இயங்கும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு பயிற்சி நிலையங்களில் 11 வகையான பயிற்சி நெறிகளையும், அம்பாறை மாவட்டத்தில் இயங்கும் தமிழ் - சிங்கள் மொழிமூல 12 நிலையங்களில் 25 வகையா தொழிற் பயிற்சிகளையும் பூர்த்தி செய்தவர்கள் பரீட்சைக்கு தகுதி பெற்றுள்ளார்கள்.

## பட்டதாரி ஒன்றியத்தால் முன்பள்ளி பாடசாலை

(ச. நல்லரெட்ணம்)

வந்தாறுமூலை பட்டதாரி ஒன்றியத்திக் மூலம் எதிர் வரும் ஜனவரி மாதம் 5ம் திகதி முன்பள்ளி பாடசாலை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பாடசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடுவதுடன் வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட கற்பித்தல் உபகரணங்கள் பயன்படுத்தப்பட உள்ளதுடன் முன்பள்ளி மாணவர்களுக்கு சத்துணவுத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக வந்தாறுமூலை பட்டதாரிகள் ஒன்றியத் தலைவர் ந. அருள்பிரகாசம் தெரிவித்தார்.

ஒந்தாச்சிமடம்................

ன் விரைந்து மண் தோண்டக்கூடாது எனவும், கப்பலை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட வேண்டாம் எனவும் உத்தரவு இட்டதோடு புகைப்படமும் எடுத்தனர்.

தொல் பொருள் ஆராய்ச்சி நிலையத்துக்கு இது பற்றி அறிவித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தி ஜீவிகள் ஊடகவியலாளர்கள் பலர் படையெடுத்து வருவதுடன் இச் செய்தி தற்போது அனைத்து இடங்களிலும் பரவிவருவது குறிப்பிடத்தக்க விடயமாகும். கிராமவாசி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் 1978 ஆண்டு சூறாவளியின் போது இரண்டு றோளர் இனப்படகுகள் கரை சேர்ந்ததாகவும் அப்படகுகளில் ஒன்று இது எனவும் சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

வெளிநாட்டவர்களும் இதை வந்து பார்த்துச் செல்வது குறிப்பிடத்தக்கது.

திட்டமிட்ட................

க்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இவ்விரு இனங்களுகுமிடையே உள்ள உறவை இரத்த உரித்தென்றும் மூதாதையர்கள் கூறுகின்றனர். கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு கிராமத்தில் முஸ்லிம்கள் குடியேறி வாழ்ந்த போது அவர்களின் தொழில் சார்பாக அக்கிராமம் பொருத்தமற்றதாக இருந்ததால் தமிழ் மக்கள் அவர்களுக்குப் பொருத்தமான தமது கிராமத்தை விட்டுக் கொடுத்து ஒத்துமாறிக் கொண்டதாக வரலாறு கூறுகின்றது. எனவே தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான நல்லுறவு மேலோங்க வேண்டும்.

பதவி ஆசை பிடித்லையும் கொலைகாரக்கும்பலொன்று சமாதானத்தை குழப்ப முயல்கின்றது.

முஸ்லிம் இனத்தின் விடிவெள்ளியைக் கிள்ளிஎறிந்த இக்கும்பலே இன்று சமாதானத்தைக் குழப்புகின்றது என்பது வெளிப்படையானதாகும்.

எனவே இப்புல்லுருவிகளின் வலைகளில் சிக்காது சகல இன மக்களும் ஒற்றுமையைப் பேணுவதுடன் நாட்டில் நிரந்தர சமாதானம் தோற்றுவிக்கப்படவும் ஒத்துழைத்து நல்கவேண்டும் இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிளவிக்கப்பட்டுள்ளது.

# அமரர் நாகேந்திரத்தின் மறைவு பிரதேச மக்களுக்கு பேரிழப்பு

(அரியம்)

குடும்பி மலைக்கோட் அபிவிருத்திக் குழுக்களின் ஒன்றிய ஆலோசகராக இருந்து பலதரப்பட்ட அபிவிருத்திப்பணிகளை முன்னெடுக்கும் வேளையில் அமரர் நாகேந்திரத்தின் மறைவு இப்பகுதி மக்களுக்கு பெரும் இழப்பாகும். என குடும்பிமலைக் கோட்ட அரசியல் பொறுப்பாளர் ஜெயா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அமரத்துவம் அடைந்த முன்நாள் கல்விப் பணிப்பாளரான வந்தாறுமூலை நாகேந்திரத்தின் மறைவை ஒட்டி தமிழ் அலைக்கு கருத்துத் தெரிவித்த குடும்பிமலைக்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஜெயா மேலும் கூறுகையில் குடும்பிமலைக் கோட்டத்தின் அபிவிருத்தி, கல்வி, சமூகவெழிச்சி தொடர்பாக பல்வேறு திட்டங்களில் ஆர்வம்காட்டி செயற்பட்ட நாகேந்திரத்தின் மறைவு இப்பிரதேச மக்களுக்க பேர் இழப்பாகும்.

அன்னாரின் மறைவால் வேதனைப்படும் குடும்பத்தார் அனைவருக்கும் குடும்பிமலைக்கோட்ட பகுதி மக்களின் ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியினை தெரிவிப்பதாகவும் மேலும் கூறினார்.

## நீதியாளரின் தாயார் நேற்று காலமானார்

(எம். யுவராஜ்)

மட் அம்பாறை மாவட்ட நீதியாளார் தயாவின் தாயார் உமையாத்தை நேற்று 63வது வயதில் காயான்மடுவில் காலமானார். இவரது இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடை பெற்று கன்னங்குடா பொது மாயனத்தில் நல்லடக்கம் செய்யப்படும் இறுதிக் கிரியையில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் பெருந்திரளான பொது மக்கள் கலந்து கொண்டு இறுதி அஞ்சலியை செலுத்திவருகின்றனர்.

## சமாதானம் கோரி திருவாசகம் முற்றோதல்

(அரியம்)

பிறந்துள்ள 2004ம் ஆண்டில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமாதானம் ஏற்பட வேண்டும் எனக் கோரி இன்று கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் திருவாசகம் முற்றோதல் இடம்பெறவுள்ளது. பட்டிப்பளைப்பிரதேச ஆலயங்களின் ஒன்றிய தலைவரும் சிவ தொண்டனுமான ஏ.துரையப்பா தலைமையில் இடம்பெறும் நிகழ்வின் போது, பல இந்து நிறுவன அமைப்பைச் சேர்ந்தவர்களும், பொது மக்களும் கலந்து சிறப்பிப்பதுடன் இன்று விசேட பூசை வழிபாடும் இடம்பெறும்.

தென்கிழக்கு................

இடம்பெ இருப்பதுடன் அன்று முதல் 26ம் திகதி வரை புதிய மாணவர்களுக்கான துரித ஆங்கில பாட போதனையும் நடைபெறவுள்ளது.

இதே வேளை இப்பல்கலைக்கழகத்தின் புதிய ஆண்டு எதிர் வரும் 26ம் திகதி (26.01.2004) ஆரம்பமாகும் எனவும் விடுதி மாணவர்கள் சகலரும் 25ம் திகதி பி.ப. 5:30 மணிக்கு முன்னர் விடுதிகளுக்குச் சமூகம் தருமாறும் தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் பதிவாளர் மன்சூர் ஏ. காதர் அறிவித்துள்ளார்.

# அம்பாறை மாவட்டத்தில் பல்கலைக்கழக மாணவர் அனுமதியை அதிகரிக்க முயற்சி

(எம். யுவராஜ்)

அம்பாறை மாவட்டத்தில் உயர் வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களது பல்கலைக்கழக அனுமதியை அதிகரிப்பதற்கான முதலாவது மாதிரித்திட்டம் காரைதீவில் இன்று அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது. இம்மத்திய நிலையத்திற்கு நிர்வாகிகயைத் தெரிவு செய்வதற்கான ஆரம்பக்கூட்டம் இன்று பிற்பகல் 5.00 மணிக்கு காரைதீவு மத்திய கல்லூரியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட கல்வி இணைப்பாளர் விக்ரர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இத்திட்டமானது கட்டம்கட்டமாக அம்பாறை மாவட்டம் முழுவதும் விஸ்தரிக்கப்டும் என்றும், ஆரம்பிக்கப்படவுள்ள அபிவிருத்தி நிலையமானது மாதிரி திட்டம் என்றும் அதில் காரைதீவு கல்விச் சமூகம் முழு மூச்சுடன் பணியாற்ற ஆர்வமாய் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பல்பிடுங்கச் சென்ற சிறுவன் மீது மருத்துவர் கன்னத்தில் அறைந்தார்

## பெற்றோர், பொது மக்கள் கவலை

(அ. நல்லரெட்ணம்)

செங்கலடி அரசினர் வைத்தியசலையில் பல்சிகிச்சைக்காகச் சென்ற 9 வயதுச்சிறுவனை பல்பிடுங்கும் வைத்தியர் முறையற்ற விதத்தில் தண்டித்ததாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வந்தாறுமூலையைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை விதுசன் என்னும் மேற்படி மாணவனை பல் பிடுங்குவதற்காக பெற்றோர் வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்று அனுமதித்த போது: மேற்படிச் சிறுவன் பல் பிடுங்கும் கருவிகளைப் பார்த்து பீதியடைந்து அழுத போது வைத்தியர் பலமாகத் தாக்கியதாகவும் இச்சம்பவத்தையடுத்து ஏனைய நோயாளர்களும் பல்பிடுங்கும் போது மேற்படி வைத்தியர் நடந்து கொள்ளும் விதம் குறித்து அதிருப்தி தெரிவித்தனர்.

## தேவாலயங்கள் மீதான தாக்குதலுக்கு இந்து மாமன்றம் கண்டனம்

கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது அண்மைக் காலமாக இனந்தெரியாதவர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களை அகில இலங்கை இந்துமாமன்றம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதுதொடர்பாக அகில இலங்கை இந்துமாமன்றம் விரிவான அறிக்கையொன்றையும் வெளியிட்டிருக்கின்றது. இந்து ஆலயங்கள் பல முன்பு தாக்கப்பட்டதைப் போல தற்போது ஏனைய மத வழிபாட்டுத் தலங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடும் அந்த அறிக்கை, பிற மதங்களுக்கு மதிப்பளித்து வரும் இந்துக்கள் ஏனைய மதங்கள் மீதான தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கவேண்டும் என்றும் கூறுகிறது.

# மட்.தொழில்நுட்பக் கல்லூரியின் விரிவுரைகள் 19ம் திகதி ஆரம்பம்

(எம். யுவராஜ்)

மட்டக்களப்பு தொழில்நுட்பக்கலலூரியில் இயங்கும் உயர் தேசிய நிறுவனத்தின் 2004ம் ஆண்டுக்குரிய முழுநேர, பகுதி நேரப்பயிற்சி நெறிகள் எதிர்வரும் 19ம்திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக இக்கல்லூரியின் வளஇணைப்பாளர் எம்.குணரெட்ணம் தெரிவித்தார்.

முழு நேரப்பயிற்சி நெறியான கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா, பகுதி நேர பயிற்றி நெறியான கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா, ஆங்கில டிப்ளோமா ஆகிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இப் பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 03.01.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.